
janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi | janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

நிறுவனர்: ப. ஜீவானந்தம்

மலர் 86 | 2023 டிசம்பர் 03 - டிசம்பர் 09 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 35




## 27 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி சென்னையில்

# தொழிலாளர்கள்-விவசாயிகள் பேரெழுச்சி

## மத்திய தொழிற்சங்கங்கள்-ஐக்கிய விவசாயிகள் முன்னணி பங்கேற்பு

**இந்திய மக்கள் வாழ மோடி அரசு வீழ நாடு முழுவதும், மாநில தலைநகரங்களில் ஆளுநர் மாளிகை முன்பு நவம்பர் 26,27,28 தேதிகளில் பெருந்திரள் அமர்வு நடத்திட ஆகஸ்ட் 24 அன்று டெல்லியில் கூடிய அனைத்து மத்திய தொழிற்சங்கங்கள், 200க்கும் மேற்பட்ட தனித்த சங்கங்கள், சம்மேளனங்கள், ஐக்கிய விவசாயிகள் முன்னணி ( சம்யுக்த கிசான் மோர்ச்சா) இணைந்த தேசிய மாநாடு அறைகூவல் விடுத்தது.**



அதன் அடிப்படையில் நாடு முழுவதும் நடைபெற்ற இயக்கத்தின் ஒரு பகுதியாக சென்னை, ராஜரத்தினம் ஸ்டேடியம் அருகே நவம்பர் 26,27 தேதிகளில் பெருந்திரள் அமர்வு நடைபெற்றது. இந்த போராட்டத்தில் ஒவ்வொரு நாளும் 6000க்கும் அதிகமான தொழிலாளர்கள், விவசாயிகள் பங்கேற்றனர். தொமுச பொதுச்செயலாளர் மு. சண்முகம் எம். பி. பொருளாளர் கி. நடராஜன், ஏஐடியூசி தேசிய செயலாளர்கள் டி. எம். மூர்த்தி, வஹிதா நிஜாம், ஏஐபிஇஏ பொதுச் செயலாளர் சி.எச்.வெங்கடாசலம், இந்திய விவசாய தொழிலாளர் சங்கத்தின் தலைவர் நா. பெரியசாமி முன். எம்எல்ஏ, தமிழ்நாடு ஏஐடியூசி தலைவர் எஸ். காசி விஸ்வநாதன், பொதுச்செயலாளர் ம.இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் தலைவர் எஸ். குணசேகரன் முன்.எம்எல்ஏ, மாநிலச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் அ. பாஸ்கர்,ஏஐகேஎஸ் தலைவர் விஜூ கிருஷ்ணன், சிஐடியு துணைத்தலைவர் ஏ.கே.பத்மநாபன், மாநில தலைவர் அ. சவுந்தரராசன், ஜி.சுகுமாரன், எச்எம்எஸ் தலைவர் க.அ.ராஜாஸ்ரீதர், மு. சுப்பிரமணியன், ஐஎன்டியூசி டி.வி.சேவியர், ஆதிகேசவன், என்எப்டிஇ கே. நடராஜன், ஏஐடிஇஎப் க. விஜயசீலன், ஏஐயுடியுசி வி.சிவகுமார், டபிள்யூபிடியூசி ஆர் சம்பத், எம்எல்எப் இரா.அந்திரிதாஸ், எல்டியூசி ஏ.எஸ்.குமார், எல்எல்எப் க.பேரறிவாளன், எஸ்கேஎம் கே.பாலகிருஷ்ணன், ஏஐகேஎஸ் சண்முகம், தற்சார்பு விவசாயிகள் அமைப்பு பொன்னையன் உள்ளிட்ட பலர் உரையாற்றினர்.

நவம்பர் 27,28 தேதிகளில் மாவட்ட தலைநகரங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 30 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பங்கேற்றனர். முன்னதாக தமிழ்நாடு முழுவதும் பரப்புரை மேற்கொள்ளப்பட்டது.

பெருந்திரள் அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

### தொழிலாளர் விரோத சட்டதொகுப்புகள் நான்கையும் திரும்பப் பெறுக!

கடந்த 150 ஆண்டு காலத்திற்கு மேலாக தொழிலாளர்கள் தொடர்ச்சியாக போராடி, வேலை நிரந்தரம், சம்பள உத்தரவாதம், போனஸ், பணிக்கொடை, ஓய்வூதியம்,சமூக பாதுகாப்பு, பணியிடம் பாதுகாப்பு உள்ளிட்ட பல நலன்களை சட்டங்கள் மூலம் பெற்றிருக்கிறார்கள். அவை அனைத்தையும் பறிக்கிற வகையில், இனி யாருக்கும் நிரந்தரப் பணி இல்லை, வேலைக்கும் சம்பளத்திற்கும் உறுதியில்லை என்ற நிலையை மோடி அரசு தோற்றுவித்துள்ளது. விரும்பினால் வேலைக்கு அமர்த்தவும், வேண்டாம் எனில் உடனடியாக துரத்தவும், முதலாளிகளுக்கு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்




















கட்சிக் கடிதம்



# அலைகடல் மீது தொலையும் வாழ்க்கை 2

# கிரிக்கெட் போட்டியில் தோற்றால் மீனவர்களைச் சுட்டுக் கொல்வதா?



போர்க்குணம் மிக்க தோழர்களே!

**மீனவர்கள் மீது கரிசனம் கொண்டது போல, ஒன்றிய நிதி அமைச்சர் மாண்புமிகு நிர்மலா அவர்களின் நாடகம் குறித்து எழுதத் தொடங்கிய கடிதம் நீண்டு விட்டது. அடுத்த இதழில் முடியலாம்.**

அவருடைய நாடகம் குறித்து ஒரே கடிதத்தில் கூட முடித்து விடலாம். ஆனால்..

மீனவர்கள் 22 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்து, இலங்கைக்கு கொண்டு சென்றதை கண்டித்து நமது கட்சியின் மாநிலக் குழு சார்பில் கண்டன அறிக்கை வெளியிடப்பட்டது. அதனைப் படித்த இராமேஸ்வரம் மீனவ மக்களின் தலைவர்களில் ஒருவரான தோழர் அ.எடிசன் அவர்கள், கைபேசி வழியாகத் தொடர்பு கொண்டு நமது கட்சிக்கு நன்றி தெரிவித்தார். நமது கட்சியின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ள முக்கிய கருத்துகளை அவர் வரவேற்றதுடன், மீனவ மக்கள் கடந்த 40 ஆண்டு காலமாக எவ்வளவு மோசமான முறையில் இன்னல்களுக்கு ஆளாகி வருகின்றனர் என்பது குறித்த சில விபரங்களையும் எடுத்துக் கூறினார்.

அவர் கூறிய கருத்துக்களுடன் சற்று விபரமாக மீனவ மக்களின் பிரச்சனைகள், கச்சத்தீவு, எதார்த்தமான நிலைகள் இவற்றையும் சேர்த்து விவரிக்க வேண்டும் எனத் தோன்றியது.

காரணம், நமது நாட்டு மீனவர்களில் வேறு எந்த மாநில மீனவர்களுக்கும் இத்தகைய துயரங்கள் நிகழவில்லை.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் குறிப்பாக, புதுவை மாநிலத்தைச் சேர்ந்த காரைக்கால், மற்றும் தமிழகத்தைச் சேர்ந்த மயிலாடுதுறை, நாகப்பட்டினம். திருவாரூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள துயரங்கள் சாதாரணமானதல்ல.

அவற்றை எல்லாம் குறிப்பிட வேண்டும் என நினைத்ததால் கடிதம் விரிவாகிவிட்டது.

இராமேஸ்வரம் தோழர் அ.எடிசன் குறிப்பிட்ட செய்திகளுடன், நமது நினைவில் வாழும், குமரி மாவட்டத்தைச் சேர்ந்த, உயர்நீதிமன்ற வழக்குரைஞர் ஆற்றல்மிகு தோழர் லிங்கன் அவர்கள் எழுதி வெளியிட்ட "மீனவர்களும் அரசியல் பிரதிநிதித்துவமும்" என்கிற நூலில் புள்ளிவிவரங்களுடன் தரப்பட்டுள்ள பல்வேறு தகவல்களில் சிலவும் இக்கடிதத்தில் இடம்பெற்றுள்ளன.

ஆகவே கடிதம் ஒன்று, இரண்டு, மூன்று என்று தொடர்வதை வாசகர்களும் தோழர்களும் பொறுத்தருள வேண்டுகிறோம்.

ஐ.நா. சபையின் கடலுக்கான சட்டத்தின் பிரிவு 73ன்படி, கடலை எல்லையாகக் கொண்ட நாடுகள், தங்கள் கடல் எல்லைக்குள் வரும் பிற நாடுகளின் படகுகளில் ஏறி பரிசோதனை மேற்கொள்ளுதல், கைது செய்தல், சட்டங்களுக்கு உட்பட்டு நீதிமன்ற நடவடிக்கை எடுத்தல் போன்றவற்றில் ஈடுபடலாம்.

சர்வதேச கடல் எல்லையை கடந்து, இன்னொரு நாட்டின் கடல் பகுதியில் மீன்பிடிப்பது ஒரு சிவில் பொருளாதார குற்றம் ஆகும். அது குற்றவியல் குற்றம் அல்ல.

எல்லை தாண்டி வரும் மீனவர்களை சுட்டுக்கொல்வது எந்த வகையான சட்டத்திலும் இல்லை. ஆனால் சிங்கள அரசு தொடர்ச்சியாக கடலுக்கான ஐ.நா. சட்டத்தை அப்பட்டமாக மீறி வருகிறது.

இராமநாதபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மீனவ பெருமக்கள், ஏறத்தாழ 4 லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக சிங்கள கடற்படையின் கடுமையான, மிகக் கடுமையான துன்ப துயரங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

சிங்கள அரசுக்கும் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்குமான மோதலுக்கு, தமிழ்நாட்டு மீனவர்கள் ஒருபோதும் காரணமல்ல.

சிங்கள அரசு தமிழர்களை இரண்டாம் தர குடிமக்களாக கருதியது. ஒரே நாட்டில் வாழும் மக்களை இரண்டாக சிங்களவர், தமிழர் எனப் பிரித்தது.

சிங்கள அரசால் தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. இதன் விளைவாக தமிழ் மக்கள் தங்களின் உரிமைகளுக்காகப் போராடினர். அகிம்சை வழியில் தங்களின் கோரிக்கைகளை அரசுக்கு எடுத்துரைத்தனர். ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம் என்ற ரீதியில் ஜனநாயக வழிப்பட்ட அனைத்து வடிவங்களிலும், நீண்ட பல ஆண்டுகளாய் எடுத்துரைத்ததை, சிங்கள அரசு செவிமடுத்து கேட்க மறுத்துவிட்டது.

சிங்கள அரசு ஜனநாயகத்திற்கு புறம்பான முறையில் செயல்பட்டது. தமிழ் மக்களை முற்றாகப் புறக்கணித்ததை உலகம் நன்கறியும்.

தொடர்ந்து இழைக்கப்பட்ட கொடுமைகளை எதிர்த்து, ஈழத் தமிழ் இளைஞர்கள் பல குழுக்களாக ஆயுதம் ஏந்தி போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. கடைசியாக, விடுதலைப்புலிகள் அமைப்பு ஆயுதம் தாங்கிப் போராட எஞ்சியது. சிங்கள அரசு அவர்களுக்கு எதிரான யுத்தத்தை மேற்கொண்டது.

இப்பிரச்சனைக்கும் தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் என்ன தொடர்பு? இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமான போரை சிங்கள அரசு, தமிழக மீனவர்களுக்கு எதிரானதாகவும் மேற்கொண்டது.

தமிழக மீனவர்களைத் தாக்கியும் படகுகளை சேதப்படுத்தியும் அவர்களது வாழ்வாதாரத்தை சீரழித்தது. ஆனால் விடுதலைப் புலிகளின் படகு என தாக்கி விட்டோம் என்று சால்சாப்பு கூறியது.

2011 ஆம் ஆண்டு இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே நடைபெற்ற மட்டைப்பந்துப் போட்டியில் இந்திய அணி வெற்றி பெற்றது. இலங்கை அணி தோற்றது. இதன் விளைவு, போட்டி நடைபெற்ற மறுநாள் நான்கு தமிழக மீனவர்கள் சிங்களப் படையால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

தங்கள் நாட்டு அணி விளையாட்டில் தோற்றுப் போனதற்கும் தமிழ்நாட்டு மீனவர்களுக்கும் என்ன தொடர்பு? தாங்கள் தோற்று விட்டோம் என்கிற அந்தத் தோல்வியை தாங்கிக் கொள்ள இயலாத, வெறிபிடித்த சிங்களப்படை தமிழக மீனவர்களை சுட்டுக் கொன்றது கொடுமை அல்லவா?

1983 ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13ஆம் நாள் ஒரகாடு கிராமத்தைச் சேர்ந்த முனிசாமி என்கிற மீனவர் இலங்கை கடற்படையால் துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டார். இதுவே முதல் பலியாகும்.

இதிலிருந்து தொடர்ச்சியாக தமிழ்நாட்டு மீனவர்களை இலங்கை கடற்படையினர் சுட்டுக் கொல்கின்றனர்.

பலியானவர்கள் எண்ணிக்கை உயர்ந்து கொண்டே போகிறது. துப்பாக்கி குண்டு துளைத்து காயம் பட்டவர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள்.

விவசாயிகள் தங்கள் தொழிலான விவசாயப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

நெசவாளர்கள் தங்கள் நெசவுப் பணிகளை மேற்கொள்கின்றனர்.

இப்படி ஒவ்வொரு தொழில் குறித்தும் உதாரணங்களை சொல்லிக் கொண்டே போகலாம்.

இதுபோன்று மீனவர்கள் தங்களின் தொழிலான மீன்பிடித் தொழிலை மேற்கொள்கின்றனர்.

கடலில் உள்ள மீன்வளத்தை யாரும் உருவாக்கவில்லை. அவற்றுக்குத் தேவையான உணவுகளை அளித்து வளர்ப்பு மீன்கள் போன்று வளர்க்கவில்லை.

இயற்கையாக அமைந்திட்ட கடலையும், அதில் உற்பத்தியாகும் மீன்களையும் மட்டுமே நம்பி, கடலோடு தங்களது வாழ்க்கையை அமைத்துக் கொண்ட மீனவர்கள், அவற்றையே தங்களின் வாழ்வாதாரமாகக் கொண்டுள்ளனர்.

உலகம் முழுவதும் மீனவர்கள் உள்ளனர். நமது நாட்டிலும் பல்வேறு மாநிலங்களில் மீனவர்கள் உள்ளனர். இலங்கையிலும் மீனவர்கள் உள்ளனர்.

இலங்கை மீனவர்களும், இந்தியக் கடல் பகுதிகளில் எல்லை தாண்டி மீன்பிடிக்கின்றனர். அவர்களில் யாராவது இந்திய கடற்படையால் இதுவரை சுட்டுக் கொல்லப்பட்டது உண்டா?

இலங்கை மீனவர்களின் படகுகள் இந்திய கடற்படையால் சேதமாக்கப்பட்டது உண்டா?

இலங்கை மீனவர்களின் படகுகள் இந்திய கடற்படையால் சிறைபிடிக்கப்பட்டது உண்டா?


இலங்கை மீனவர்களின் வலைகளை அறுத்து சேதப்படுத்தியது உண்டா?

இலங்கை மீனவர்கள் எவரேனும் ஒருவர் இந்திய சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டது உண்டா?

ஆனால் ..

**(தொடரும்)**

தோழமைமிக்க,



(இரா.முத்தரசன்)
மாநிலச் செயலாளர்



# 41 தொழிலாளர்கள் மீட்கப்பட்டது மகிழ்ச்சி! எதனால் இந்த சிக்கல்!?



டி.எம்.மூர்த்தி

**உத்தரகாண்ட் மாநிலத்தில் இமய மலைத்தொடரை குடைந்து 4.5 கிலோமீட்டர் நீள சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு வந்தது. இதன் மதிப்பு ஒன்றரை பில்லியன் டாலர்களாகும். கிட்டத்தட்ட 12 ஆயிரம் கோடி ரூபாய்**

### 20 கி.மீ.யை குறைப்பதற்காக..

இது மோடியின் பிரிய திட்டமான 'சார் தாம் நெடுஞ்சாலை' திட்டத்தின் ஒரு பகுதி. இமயமலையை சுற்றியுள்ள இந்து வழிபாட்டுத் தலங்களை இணைப்பதற்கான திட்டம் இது. யமுனோத்திரிக்கு செல்லும் பக்தி பயணத்தை 20 கி.மீ. குறைப்பதற்காக இந்த திட்டம் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் முதல் கட்டம், 2022 டிசம்பர் மாதத்தில் மோடியால் துவக்கி வைக்கப்பட்டது. மலையை குடைந்து சாலை அமைக்கும் பணியைச் செய்ய நவயுகா இன்ஜினியரிங் கம்பெனி என்ற நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது.

### யார் இந்த நவயுகா?

இந்த நிறுவனம் ஆந்திராவைச் சேர்ந்ததாகும். ஏற்கனவே இந்த நிறுவனம் சம்மிருதி நெடுஞ்சாலையைக் கட்டுமானம் செய்த போது, மூன்று மாதங்களுக்கு முன்புதான், இன்ஜினியர்கள் உட்பட 20 தொழிலாளர்கள் விபத்தில் கொல்லப்பட்டனர். இது குறித்து வழக்கும் உள்ளது.

இதே நிறுவனம் நடத்துகிற கிருஷ்ண பட்டினம் துறைமுகத்தின் மீது அதானி குழுமத்திற்கு ஒரு கண் உண்டு. அதனைத் தர இந்நிறுவனம் மறுத்தது. 2018 அக்டோபர் 26ம் தேதி இந்த நிறுவனம் வருமான வரி விதிகளை மீறியதாகவும் முறைகேடான பண பரிவர்த்தனை செய்ததற்காகவும் ஐ.டி. ரெய்டு நடத்தப்பட்டது.

அதன் பிறகு 2020 ஜூலை மாதத்தில் இந்த நவயுகா நிறுவனத்தின் 75% பங்குகளை அதானி குழுமம் வாங்கிக் கொள்ள காம்பெடிஷன் கமிஷன் ஆப் இந்தியா அனுமதி அளித்தது. மீதி 25 பங்குகள் 2021ல் அரசால் எடுத்துக் கொள்ளப்பட்டன. இப்போது இந்த திட்டத்துக்கும் தனக்கும் சம்பந்தமில்லை என்று அதானி நிறுவனம் மறுத்துள்ளது.

மறுபடியும் இதே நிறுவனத்திற்கு ரிஷிகேஷில் இருந்து கர்ணபிரயாகை வரை ரயில் பாதை அமைப்பதற்கான திட்டத்துக்கான ஒப்பந்தமும் 2020ல் தரப்பட்டது.

### புலம்பெயர்ந்த ஏழைத் தொழிலாளர்கள்

மலையை குடையும்போது, அது இடிந்து விழாமல் இருக்க காப்புச் சுவர் கட்டிக் கொண்டே தான் குகை தோண்டப்படுகிறது. நவம்பர் 12ஆம் தேதி அதிகாலையில் 5:30 மணிக்கு அந்த குகையில், நடுவில் கட்டப்பட்ட கட்டுமானம் இடிந்து சரிந்து வழியை மூடிவிட்டது. ஒரு பக்கம் மலையும், மறுபக்கம் இடிபாடுகளுமாக, நடுவில் 41 தொழிலாளர்கள் மாட்டிக்கொண்டனர். இவர்கள் அனைவரும் இந்தியாவின் ஏழ்மைமிக்க மாநிலங்களில் இருந்து வந்த புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் ஆவார்கள். எல்லோரும் 21 லிருந்து 29 வயதுக்கு உட்பட்டவர்கள்.

குகை முற்றிலுமாக இடிந்து விட்டதா? உள்ளே இருப்பவர்கள் உயிரோடு இருக்கிறார்களா என்பதை கண்டறிவது முதல்வேலைஆயிற்று. 60 மீட்டர் நீளத்திற்கு இடிபாடுகளுக்கு மத்தியில் ஒரு குழாயை செலுத்த வேண்டியது முதல் பணி.

### திருச்செங்கோட்டின் கருவி

இடிபாடுகளில் மிகப் பிரம்மாண்டமான கற்கள் இருப்பது மட்டுமல்ல இடிந்து விழுந்த காப்புச் சுவரின் கம்பிக் கட்டுமானமும் இருந்தது. இவற்றைத் துளைப்பது பெரும் சவாலான பணி.

செய்வதெரியாமல் திகைத்து கொண்டிருந்த போது. தமிழ்நாட்டின் நாமக்கல் மாவட்டம். திருச்செங்கோட்டைச் சேர்ந்த நிறுவனம், உற்பத்தி செய்த 'ரிக்' கருவிதான் ஒரு சாதனையை நிகழ்த்தியது. துளை போடப்பட்டு, ட்ரில்லரை வெளியே எடுக்கும்போதே, வார்ப்பு குழாய் கட்டமைக்கப்பட்டு விடுகிற வசதி கொண்டது அந்தக் கருவி.

அதன் துணையோடு, ஆறு அங்குல விட்டம் கொண்ட துளை போட்டு குழாய் அமைக்கப்பட்டது. குழாயின் மூலம் தான் உயிர் தரிப்பதற்கான ஆக்சிஜனும். உணவும் தண்ணீரும் 17 நாட்களாக தரப்பட்டுள்ளன.

### பிஎஸ்என்எல்

இந்த குழாய் வழியாக, உள்ளே அகப்பட்டுக் கொண்டவர்களிடம் தகவல் தொடர்பு அமைத்து தரும் தலையாய பணியை இந்திய பொதுத்துறை நிறுவனமான பிஎஸ்என்எல் செய்து தந்தது. அவர்களோடு குடும்பத்தினர் பேச செய்து இரு தரப்பிலும் நம்பிக்கை ஏற்படுத்தியது. அதன் வழியே மைக்ரோ கேமராவை அனுப்பி, உள்ளே இருப்பவர்களை வெளியிலிருந்து பார்ப்பதற்கும் வழிவகை செய்தது.

### எப்படி கொண்டாடி இருப்பார்கள்!

இந்த சுரங்கப்பாதை சிறப்பாக கட்டுமான பணி மிகச் சுரங்கப்பாதை பணி வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டிருந்தால் அதானியின் நிறுவனம் அந்த வெற்றிக்கு சொந்தம் கொண்டாடி இருக்கும். ஒருவேளை அம்பானியின் ஜியோ நிறுவனம் தகவல் தொடர்பு செய்து தந்திருந்தால், கார்ப்பரேட்டுகளால் தான் இந்தியா காப்பாற்றப்படுகிறது என்று மோடி கூட புகழ்ந்துரைத்து இருப்பார். திருச்செங்கோட்டைச் சேர்ந்த தமிழ்நாட்டு நிறுவனத்திற்கு பதிலாக, முதல் துளையிடும் பணியை ஒரு அமெரிக்க நிறுவனம் செய்து முடித்து இருந்தால் அதற்குப் பெரும் நன்றி தெரிவிக்கப்பட்டு இருக்கும்.

இடிபாடுகளுக்கு மத்தியில் குழாய் அமைப்பது மட்டுமல்லாமல், மேலே இருந்து செங்குத்தாக தொலை போடவும் முயற்சி எடுக்கப்பட்டது. ஒரு அமெரிக்க ரிக் யந்திரக் கல்வி இப்பணியில் பயன்படுத்தப்பட்டது. பலமுறை அதன் பிளேடுகள் உடைந்து சிக்கிக் கொண்டன.

கடைசி பத்து மீட்டர் தூரத்துக்கு துளையிட இயந்திர உதவி இல்லாமல் போன பிறகு, இறுதியில் வேறு வழி இல்லாமல், அதுவரை போடப்பட்டிருந்த மூன்று அடி விட்ட குழாய்க்குள் மனிதர்களை அனுப்பி இடுப்பாடுகளை அகற்றும் சவாலான பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கு 'ரேட் ஹோல்' (எலித் துளை) தொழில்நுட்பம் என்று பெயர்.


### இந்து முஸ்லிம் இணைந்த பணி!

உயிருக்கே ஆபத்தான இந்த பணியை, ஃபெரோஸ், முன்னா குரேஷி, இர்ஷாத், நசீம், மோனு, அங்குர், ஜத்தின், சவுரஃப், தேவேந்தர், வகீல் ஹாசன் ஆகிய தொழிலாளர்கள் செய்து முடித்தனர்.

உத்தர்காண்ட் முதல்வர் தமியும் அந்த மாநிலத்திலிருந்து முஸ்லிம்கள் அனைவரையும் வெளியேற்ற வேண்டும் என்று பேசி வந்திருக்கிறார். அனைத்து முஸ்லிம்களையும் வெளியேற்றி இருந்தால், இந்த துளைக்குள் யார் நுழைந்திருப்பார்கள்! இந்து முஸ்லீம் தொழிலாளர்கள் இணைந்து தான் இந்த பணியை வெற்றிகரமாக முடித்தனர்.

ஒரு வழியாக, 28ஆம் தேதி நள்ளிரவில் 41 தொழிலாளர்கள் முழுமையாக மீட்கப்பட்டனர்.






### ஆஸ்திரேலியர்

இந்த மீட்பு பணிக்கு தலைமையேற்று ஒருங்கிணைத்தவர் சர்வதேச சுரங்க அமைப்பின் தலைவரான அர்னால்ட் டிக்ஸ் என்று நிபுணர். கிரிக்கெட் போட்டியில் வென்ற பிறகு, கோப்பை மீது கால் வைத்து அசிங்கப்படுத்தி விட்டார்கள் என்று வசைபாடப்பட்ட அதே ஆஸ்திரேலியாவை சேர்ந்தவர்.

"மீட்பு பணியில் பங்கெடுத்தது கவுரவம். ஒரு தந்தையாக, தொழிலாளர்களை அவர்களது பெற்றோர்களிடம் ஒப்படைத்ததில் மகிழ்ச்சி. மீட்பதற்கு என்ன செய்ய வேண்டும் என எங்களுக்கு புரிதல் இருந்தது; நாங்கள் சிறந்த குழுவாக பணியாற்றினோம். இந்தியாவில் சிறந்த பொறியாளர்கள் உள்ளனர். இந்த வெற்றிகரமான பணியின் ஒரு பகுதியாக இருந்ததில் மகிழ்ச்சி'' என்று அவர் தெரிவித்துள்ளார்.

### சொந்தக் காசில் சூனியம்!

இந்த திட்டம் சுற்றுச்சூழலுக்கு பெருங்கேடு விளைவுக்கும் என்று வல்லுநர்கள் தொடர்ந்து விமர்சித்து வந்தார்கள். "கனமான கட்டுமானம் இமயமலைப் பகுதியை கடுமையாக சேதப்படுத்தும். இந்தியாவின் வளமையான பகுதியான கங்கை பாயும் பள்ளத்தாக்கு பெரும் சீரழிவுக்கு உள்ளாகும்.

இமய மலைப் பகுதியில் தொடர்ந்து நெடுஞ்சாலைகளை நிர்மாணிப்பது,

உணர்திறன் வாய்ந்த சூழலில் மேலும் நிலச்சரிவு மற்றும் மண் அரிப்புக்கு வழிவகுக்கும்'' என்று இந்திய உச்ச நீதிமன்றத்தில் நிபுணர்கள் குழு ஏற்கனவே அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

சுரங்கப்பாதை சரிந்ததற்கான காரணங்களை அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர். மேலும் மலையை குடைந்து, சுரங்கங்கள் அமைப்பது பொருத்தமானதுதானா? என்பதும் ஆராயப்பட வேண்டும்.

### தலையாட்டி பொம்மை ஆகாதே!

இந்தியாவின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகம், இத்தகைய ஆய்வுகளை செய்தவர்களின் அறிவுரையை ஏற்றாக வேண்டும். தங்களின் விருப்பத்திற்கு ஏற்ப இமயமலை சூழலை சிதைப்பதற்கு தலையாட்டி பொம்மையாகி விடக்கூடாது.


இந்தப் பகுதியில் நடந்த முதல் விபத்து அல்ல இது. ஆகஸ்ட் மாதம், வடகிழக்கு மாநிலமான மிசோரமில் கட்டுமானப் பணியில் இருந்த பாலம் இடிந்து விழுந்ததில் 12க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். ஜூன் மாதம், கிழக்கு மாநிலமான பீகாரில் கங்கை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டு வந்த நான்கு வழி கான்கிரீட் பாலம், ஒரு வருடத்தில் இரண்டாவது முறையாக இடிந்து விழுந்தது.

பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய்களை செலவழித்து நாட்டுக்கும் இயற்கை வளத்துக்கும் சுற்றுச்சூழலுக்கும் பேராபத்தை ஏற்படுத்திக் கொண்டே இருக்கக் கூடாது.

## வினாடி - வினா

1. பாட்டாளி வர்க்கத்தின் முதல் அரசான பாரீஸ் கம்யூன் எவ்வளவு காலம் நீடித்தது?
2. சீனாவில் நடந்த புரட்சியை தொடர்ந்து மக்கள் சீன குடியரசு எப்பொழுது அமைக்கப்பட்டது?
3. சேகுவேரா எப்போது, எப்படி இறந்தார்?
4. ஐ.நா. சபையில் வீட்டோ எனப்படும் ரத்து செய்யும் அதிகாரம் பெற்ற நாடுகள் எவை?
5. சென்னை மாநகராட்சியின் முதல் பெண் மேயர் யார்?
6. புகழ்பெற்ற தஞ்சை பெருவுடையார் கோவிலை முதலாம் ராஜராஜன் எப்போது கட்டினார்?

விடைகள் 12 ஆம் பக்கம்



தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

ஜனசக்தி

மலர் 86 இதழ் 35

# மாநில அதிகாரிகளை துன்புறுத்தும் தீய நோக்கம்

முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் 1964 ஆம் ஆண்டில் ‘என்னால் இன்னும் நிர்வாக துறையை மாற்றி அமைக்க முடியவில்லை. அது இன்னும் காலனிய நிர்வாகம் போலவே இருக்கிறது’ என்று சொன்னார்.

அதே நேரத்தில் தமது அரசியல் எஜமானர்களின் விருப்பத்திற்கு ஏற்ப, திறமையாக விதிகளை வளைத்து அதற்குரிய வெகுமதியையும் இந்திய அதிகார வர்க்கம் பெறுகிறது.

இன்றைய சூழலில் அனைத்தையும் ஒன்றிய அரசின் கீழ் மையப்படுத்தி, மையக் கட்டளைக்கு அடிபணிய வேண்டிய கட்டாயத்துக்கு மாநில அரசுகளை தள்ளுகிற முயற்சி நடந்து கொண்டே இருக்கிறது.

அதிகாரங்கள் அனைத்தையும் மத்தியில் குவிக்கும் ஆணவம் ஒரு புறமும், அதிகாரத்தை பரவலாக்குவதற்கான ஜனநாயகத்தின் அழுத்தம் மறுபுறமுமாக இந்திய கூட்டாட்சி தத்துவம் ஒரு இழுபறிப் போரை நடத்திக் கொண்டிருக்கிறது.

எந்த மாநிலத்தில் பிறந்து வளர்ந்தாலும், தேர்வான பிறகு ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் பட்டியலில் ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் வந்து விடுகிறார்கள். அந்த மாநிலத்தின் பல்வேறு துறை நிர்வாகங்களில் அவர்கள் பணிபுரிகிறார்கள். இயல்பாகவே மாநில அரசின் விருப்பங்களை, இலக்குகளை அவர்கள் நிறைவேற்ற வேண்டியவர் ஆகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை மீறி தமது நோக்கங்களை அரசு நிர்வாகத்தில் திணிக்க, ஐஏஎஸ் அதிகாரிகளை வளைத்துப் போட ஆர்எஸ்எஸ் பிஜேபி அரசு துடிக்கிறது. அதற்கான நிர்ப்பந்தத்தை அவர்களுக்கு தருவதற்காக, எந்த மாநில ஐஏஎஸ் அதிகாரிகளையும் அவர்களது விருப்பத்தைக் கேட்காமலும், மாநில அரசின் ஒப்புதல் பெறாமலும் இந்தியாவின் எந்தப் பணிக்கும் எடுத்துக் கொள்ள ஒன்றிய அரசுக்கு அதிகாரம் உண்டு என விதிகளில் திருத்தம் கொண்டு வந்தார்கள்.

அதிகாரிகள் பற்றாக்குறை இருப்பதாக சொல்லி இப்போது ஐஏஎஸ் அல்லாதவர்களை கூட அமைச்சகச் செயலாளர்கள் ஆக்கும் நிலைக்கு மோடி அரசு சென்று விட்டது. எமது விருப்பங்களை நிறைவேற்றாவிட்டால் உமக்கு பதவி உயர்வு இல்லை என அச்சுறுத்தும் போக்கே இது.

இந்திய அரசின் மிக முக்கியமான அதிகாரப் பணியிடங்களில் எல்லாம் குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த ஐஏஎஸ் அதிகாரிகளே பணி புரிகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.இவர்கள் மோடியின் விசுவாசிகள் என்றே அறியப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டில் மாவட்ட ஆட்சியர்களாக பணி புரியும் 10 ஐஏஎஸ் அதிகாரிகளுக்கு திடீரென அமலாக்கத்துறை அழைப்பாணை (சம்மன்) அனுப்பி உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மணல் அள்ளுவதில் முறைகேடுகள் சம்பந்தமான விசாரணை என்று சொல்லப்படுகிறது. ஆனால் அந்த அதிகாரிகள் குற்றம் சாட்டப்பட்டவர்களும் அல்லர்; சாட்சிகளும் அல்லர். என்ன காரணத்துக்காக அழைக்கப் படுகிறார்கள் என்றும் கூறப்படவில்லை. அதுவும் அவர்களது ஆதார் அட்டைகளோடு வரவேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

மணல் கொள்ளை தடுக்கப்பட வேண்டியதுதான். ஆனால் அது ஏன் இரண்டு ஆண்டுகளுக்கு என்று எல்லை கட்டப்படுகிறது? அது பற்றி விசாரித்து நடவடிக்கை எடுக்க, சட்டப்படி அதிகாரம் இல்லாத அமலாக்கத்துறை ஏன் உள் நுழைக்கப்படுகிறது?

இது மாநில அதிகாரிகளை துன்புறுத்தும் தீய நோக்கம் கொண்டது என்றும் மாநில அரசு எந்திரத்தை சீர்குலைக்க ஒன்றிய அரசின் முகமைகள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் மாநில அரசு சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளது.

அரியலூர், கரூர், வேலூர், தஞ்சாவூர், திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இந்த அழைப்பாணைக்கு தடை விதிக்கக் கோரி, உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

மோடியின் அரசு ஏழரை இலட்சம் கோடி ரூபாய்களை முறைகேடாக செலவு செய்திருப்பதாக சிஏஜி கூறுகிறது. மக்களிடமிருந்து திரட்டப்பட்ட பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் கொண்ட பிஎம் கேர்ஸ் நிதி பற்றிய கணக்கே தரவில்லை. பன்னாட்டு, உள்நாட்டு கார்ப்பரேட்டுகளிடமிருந்து பல்லாயிரம் கோடி ரூபாய்களை தேர்தல் பத்திரங்களாக பிஜேபி திரட்டி உள்ளது. இந்த மோசமான முறைகேடுகள் பற்றி மோடி அரசு வாய் திறந்து பேசவில்லை.

ஊடகங்களையும், ஒன்றிய அரசு அதிகாரத்தையும் எவ்வளவு பயன்படுத்தினாலும் தமிழ்நாட்டில் பாஜகவால் வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற முடியாது என அக்கட்சி நன்கு அறியும். தேர்தல் நெருங்க நெருங்க, திமுக மற்றும் அதன் தலைவர்களின் பிம்பத்தை சீர்குலைக்கும் முயற்சிகளை மோடி அரசு மேற்கொள்கிறது.

வேறு மாநிலங்களில் இது போன்ற விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு. குற்றம் சாட்டப்பட்டவர்கள் பாஜகவில் சேர்ந்ததுமே அவர்கள் மீதான விசாரணை கைவிடப்பட்டதோடு, முதலமைச்சர் பதவி வரை கொடுக்கப்பட்டுள்ளது செய்தி.

குறுக்கு வழிகளில் வெற்றி பெற நினைப்பவர்கள், இறுதியில் தோல்வியையே தழுவி இருக்கின்றனர் என்பது வரலாறு.

1 ஆம் பக்கத் தொடர்ச்சி

அதிகாரம் அளித்து, தொழிலாளர்கள் பெற்றுவந்த உரிமைகளைப் பறிக்கும் வகையில் கொண்டு வரப்பட்டுள்ள 4 தொழிலாளர் சட்டத் தொகுப்புகளையும் ஒன்றிய பாஜக மோடி அரசு உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

### எம்.எஸ்.சுவாமிநாதன் அறிக்கைகளை முழுமையாக அமலாக்க வேண்டும்

உற்பத்தி விலையைவிட ஒன்றரை மடங்கு அதிகமான குறைந்த பட்ச ஆதார விலை வழங்க வேண்டும் அத்தோடு, அவற்றிற்கு சட்ட பூர்வ அந்தஸ்து வழங்க வேண்டும். தானியங்கள் கொள்முதலுக்கு அரசு உத்தவாதமளிக்க வேண்டும். நீர்ப்பாசனம், நிலச் சீர்திருத்தம், விவசாய உற்பத்தித் திறன், கடன் மற்றும் காப்பீடு, உணவுப் பாதுகாப்பு, விவசாயிகள் தற்கொலையைத் தடுப்பது, விவசாய சந்தை மற்றும் விவசாயத்தில் வேலைவாய்ப்பு போன்ற பல்வேறு கூறுகள் குறித்த தேசிய விவசாயிகள் ஆணையத்தின் தலைவர் வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் குழுவின் பரிந்துரைகளை, ஒன்றிய பாஜக மோடி அரசு உடனடியாக முழுமையாக அமல்படுத்த வேண்டும்.

### தமிழ்நாடு அரசுக்கு வழங்க வேண்டிய 100 நாள் வேலை திட்ட கூலி பாக்கியை முழுமையாக வழங்க வேண்டும்

நரேந்திர மோடி தலைமையிலான ஒன்றிய பிஜேபி அரசு மகாத்மா காந்தி ஊரக 100 நாள் வேலை திட்டத்திற்கான நிதியை வெகுவாக வெட்டிக் குறைத்து கிராமப்புற மக்களின் வேலை பெறும் உரிமையை பறித்து வருகிறது. இதன் விளைவாக முன்னோக்கி சென்ற கிராமப்புற பொருளாதாரமும், மக்கள் வாழ்க்கையும் கடுமையான நெருக்கடிகளை சந்தித்து கொண்டு உள்ளன. இத்தகைய கடுமையான சூழலை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்கும் வகையில் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு மாதக்கணக்கில் ஊதியம் வழங்க இயலாத நெருக்கடிக்கு எதிர்கட்சிகள் ஆளும் மாநில அரசுகளை தள்ளுகிறது. தமிழ்நாடு அரசுக்கு நிதி 2691 கோடியை தராமல் வஞ்சகம் செய்கிறது என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அமைச்சரிடம் இடித்துரைத்த பின்னரும் முழுமையாக வழங்க வேண்டிய கூலி பாக்கியை வழங்க வில்லை. இதன் காரணமாக இந்த தொழிலாளர்களுக்கு இரண்டு மாத கால ஊதியம் இப்போதும் கிடைக்கவில்லை. எனவே உடனடியாக தமிழ்நாடு அரசுக்கு வழங்க வேண்டிய 100 நாள் வேலை திட்ட நிதியை வழங்க வேண்டும், நாட்டில் பதிவு செய்துள்ள தொழிலாளர்கள் அனைவருக்கும் 200 நாட்கள் வேலை, அதனை நகர்ப்புறத்திற்கும் விரிவாக்கி குறைந்த பட்சம் ரூ. 600 ஊதியம் வழங்க தக்க வகையில் உரிய நிதியை ஒதுக்கி வழங்க ஒன்றிய பாஜக மோடி அரசு முன் வர வேண்டும்.

வந்தே பாரத் ரயில் தயாரிப்பு தனியாருக்கு தருவதற்கு கண்டனம்:

வந்தே பாரத் ரயில், அரசுத்துறை நிறுவனமான சென்னை ஐசிஎஃப் ரயில் பெட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு வந்தது. தற்போது ஒன்றிய அரசு தனியார் இத்தாலி நிறுவனம் ஒன்றிடம் தந்துள்ளது. பொதுத் துறையை சீரழித்து, நாட்டின் சொத்தை அன்னிய தனியார் நிறுவனம் அபகரிக்க வாய்ப்பளிக்கும் தனியார் மயத்தை கைவிட வேண்டும் என்று ஒன்றிய அரசை வலியுறுத்துகிறோம்.

### மின்சார ஸ்மார்ட் மீட்டர் பொருத்த மாநில அரசுகளை நிர்பந்திக்காதே!

இனி முன்பணம் கட்டி, கட்டிய பணத்துக்கு ஏற்ப மின்சாரத்தை பயன்படுத்திக் கொள்ளும் வகையில் மின்சார விநியோகம், தனியாருக்கு தரப்பட உள்ளது. விவசாயம், கைத்தறிக்கு, விசைத்தறிக்கு குறிப்பிட்ட அளவு மின்சாரம் இலவசம், (வீடுகளுக்கு 100 யூனிட் இலவச மின்சாரம்) உள்ளிட்டவை பாதிக்கப்படும் வகையில் ஒன்றிய பாஜக மோடி அரசு நிறைவேற்றி உள்ள மின்சார திருத்த சட்டத்தை திரும்பப் பெறுவதோடு, மின்சார துறையை தனியார் மயப்படுத்திட எடுக்கும் முயற்சிகளின் உச்சகட்டமாக மாநில அரசுகளை ஒவ்வொருவரும் கட்டாயமாக ஸ்மார்ட் மீட்டரை பொருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று ஒன்றிய அரசு நிர்பந்தப்படுத்துவதை கைவிட வேண்டும்.

## கலை இலக்கிய அரங்கம்

### புத்தக கண்காட்சி தொடக்கம்

விருதுநகர் மாவட்டம், விருதுநகரில் மாவட்ட நிர்வாகம், பொது நூலக இயக்ககம், தென்னிந்திய புத்தக விற்பனையாளர் மற்றும் பதிப்பாளர் சங்கம் இணைந்து நடத்திய இரண்டாவது புத்தகத் திருவிழா நவம்பர் 16 முதல் 27 வரை நடைபெற்றது.

புத்தக கண்காட்சி தொடக்க விழா மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் மாண்புமிகு கே.கே.எஸ்.எஸ்.ஆர் ராமச்சந்திரன் விழாவை துவக்கி வைத்தார்.

கண்காட்சி நடைபெற்ற 12 நாளும் பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான போட்டிகள் நடைபெற்றன. பள்ளி, கல்லூரி மாணவ மாணவியர்களின் மற்றும் அரசு அலுவலர்களின் கலை நிகழ்ச்சிகள், நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள், தலைசிறந்த ஆளுமைகளின் சிறப்புரைகள், பட்டிமன்றம், இலக்கிய அரங்க நிகழ்வுகள், நூல் வெளியீடுகள் நடைபெற்றன.




ஆறாவது நாள் நிகழ்வில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற பொதுச் செயலாளர் மருத்துவர் த.அறம் எழுதிய ‘நூற்றாண்டு கண்ட ஆளுமைகள்’ என்ற கட்டுரைத் தொகுப்பு வெளியிடப்பட்டது. செம்மலர் ஆசிரியர் தமிழ்ச்செல்வன் மதிப்புரை வழங்கினார். என்.சி.பி.ஹெச் மண்டல மேலாளர் கிருஷ்ணமூர்த்தி, மதுரை மேலாளர் மகேந்திரன், கவிஞர் செல்லா, எழுத்தாளர் மணிமாறன், தேனி வசந்தன், மாவட்டச் செயலாளர் நவநீதகிருஷ்ணன், மாநிலக் குழு உறுப்பினர் ராமசுப்பிரமணியன், ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்டச் செயலாளர் பழனிக்குமார் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

ஒன்பதாவது நாள் நிகழ்வில் ‘நூற்றாண்டு கண்ட ஆளுமைகள்’ என்ற தலைப்பில் மருத்துவர் த.அறம் இலக்கியப் பேரொளி தொ.மு.சி.ரகுநாதன், திசைகாட்டி கு. அழகிரிசாமி, பொதுவுடைமைக் கவிஞர் தமிழ்ஒளி, கரிசல் இலக்கியத் தந்தை கி.ராஜநாராயணன் குறித்து உரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் டி.ராமசாமி கலந்து கொண்டார்.

### கவிஞர் தமிழ் ஒளி நூற்றாண்டு விழா கருத்தரங்கம்

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் மற்றும் ஏஐடியுசி தொழிற்சங்கம் சார்பில் கவிஞர் தமிழ்ஒளி நூற்றாண்டு விழா மற்றும் மூத்த தொழிற்சங்க தலைவர் எஸ்.எஸ்.தியாகராஜன் நினைவு கருத்தரங்கம் பாப்பாரப்பட்டியில் நடைபெற்றது.

ஏஐடியூசி தொழிற்சங்க மாவட்டத் தலைவர் முருகன், தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற மாவட்டச் செயலாளர் சின்னக்கண்ணன் ஆகியோர் தலைமை தாங்கினர். மாவட்டத் தலைவர் திரைப்பட நடிகர் சிங்காரவேல் வரவேற்றார். ஏஐடியூசி மாவட்ட பொதுச் செயலாளர் கே.மணி, நிர்வாகிகள் குழந்தைவேல் முருகேசன், வக்கீல் மாதையன், செல்வன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

ஏஐடியுசி அகில இந்திய துணைத் தலைவர் திருப்பூர் எம்.பி கே.சுப்பராயன், கலை இலக்கியப் பெருமன்ற மாநில பொதுச் செயலாளர் டாக்டர்.த.அறம் ஆகியோர் கருத்தரங்கில் சிறப்புரை ஆற்றினர்.

ஏஐடியூசி மாநிலத் தலைவர் காசி விஸ்வநாதன், கவிஞர் ரவீந்திரபாரதி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்டச் செயலாளர் கலைச்செல்வம், மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் தேவராஜன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தமிழ்க் குமரன், மாதேஸ்வரன், வி.தொ.ச மாநில செயலாளர் பிரதாபன், வி.ச மாவட்டச் செயலாளர் சின்னசாமி உள்ளிட்ட தொழிற்சங்க நிர்வாகிகள் மற்றும் கலை இலக்கிய ஆர்வலர்கள் கருத்தரங்கில் பேசினர்.


விழாவில் கவிஞர் தமிழ்ஒளி, மூத்த தொழிற்சங்க தலைவர் எஸ்.எஸ்.தியாகராஜன் ஆகியோர் உருவப் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

விழாவில் ஏஐடியூசி மாவட்டத் துணைத் தலைவர் சுதர்சனன், கட்டுமான சங்க மாவட்டச் செயலாளர் மணி, ஆஷா, பணியாளர் சங்க மாவட்டத் தலைவர் மேனகா, நிர்வாகிகள் சிவன், ராஜி, புள்ளாரு, கோவிந்தசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



அருண் நெடுஞ்செழியன்

# காலநிலை மாற்றம்: ஐ.நா. உச்சி மாநாடுகள் தீர்வு காணுமா?




**காலநிலை மாற்றம் தொடர்பான 28 வது உச்சி மாநாடு துபாயில் நடைபெறுகிறது. ஐ.நா. ஒருங்கிணைக்கும் இந்த மாநாடு கான்ஃப்ரன்ஸ் ஆஃப் த பார்ட்டீஸ் (Conference of the Parties - COP) என சுருக்கமாக அழைக்கப்படுகிறது.**

ஐக்கிய அரபு அமீரகம் தலைமை வகிக்கும் இந்த 28வது உச்சி மாநாடு, நவம்பர் 28 ஆம் தேதி தொடங்கி டிசம்பர் 12 ஆம் தேதி நிறைவடைய உள்ளது. இதுவரை 27 உச்சி மாநாடுகள் நடைபெற்றுள்ளன. கடந்த முறை நடைபெற்ற 27வது உச்சி மாநாட்டிற்கு எகிப்து தலைமை தாங்கியது.

காலநிலை மாற்ற சிக்கலை எதிர்கொள்வது தொடர்பாக உலக நாடுகள் முக்கிய முடிவுகள் எடுக்க இருப்பதாலும், ஏற்கனவே ஒப்புக்கொண்ட முடிவுகள் குறித்த விவாதங்கள் நடைபெறும் என்பதாலும் தற்போது நடைபெறும் உச்சி மாநாடு முக்கியத்துவம் பெறுகிறது. குறிப்பாக, காலநிலை மாற்றத்தால் உலகெங்கிலும் ஏற்பட்டு வரும் பாதிப்புகள், காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வதற்கான திட்டங்களுக்கான நிதி ஆதாரம், காலநிலை மாற்றத்தை மட்டுப்படுத்துவதில் தொழில்நுட்பங்களின் பங்களிப்பு ஆகியவை குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப்படுகின்றன.

இந்த மாநாடுகளில் எடுக்கப்படும் முக்கிய முடிவுகளை தீர்மானகரமான வகையில் அமலாக்கப்படாததாலும், தொழில்நுட்பத் தீர்வை மட்டுமே பெரும்பாலும் சார்ந்திருப்பதாலும், வளர்ந்த நாடுகளுக்கும் வளரும் நாடுகளுக்குமான ஏற்றத்தாழ்வு மிக்க பொருளாதார நிலையாலும் காலநிலை மாற்ற சிக்கல்களுக்கு உலக நாடுகளால் ஒருமித்த தீர்வை உருவாக்க இயலவில்லை.

இதற்கு முன் இல்லாத வகையில் இயற்கையிடமிருந்து (நவீன யுக) மனித சமூகம் அந்நியமாவிட்டதன் எதிர்மறை விளைவுதான் புவி வெப்ப மயமாக்கல் எனும் பேராபத்து. புவி வெப்ப மயமாக்கல் பிரச்சனை குறித்து ஆயிரக்கணக்கான ஆய்வுக் கட்டுரைகள், ஆவணப்படங்கள், புத்தகங்கள் உலகெங்கிலும் வந்து கொண்டிருக்கின்றன. கால் நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக உலக நாடுகள் இந்தப் பிரச்சனை குறித்து பேசி வருகின்றன.

உலக நாடுகளுக்கு இடையில் நிலவக்கூடிய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், சந்தை நலன்கள் போன்ற காரணத்தால் ஐ.நா.வின் காலநிலை மாநாடுகள் அரசியல் சண்டைக் களமாகவும் தீர்மானகரமான தீர்வுகளை எட்ட இயலாமலும் பெரும் கூச்சல் குழப்பங்களாக நடந்து முடிகின்றன. இதனால் நம்பிக்கை யிழந்த மக்கள், மாநாடுகள் கண்துடைப்பாக நடைபெறுவதற்கு எதிராக கண்டன ஊர்வலங்களும் எதிர்மாநாடுகளும் நடத்துகின்றனர்.

### காலநிலை மாற்றம்: ஒரு அறிவியல் பார்வை

இயற்கையின் வரலாற்றுப் போக்கில் காலநிலை மாற்றம் என்பது அதன் இயல்பில் பொதுவாக நிகழ்கிற மாற்றமாகும். நமது பூமியின் காலநிலையானது அதன் வரலாற்றுக் கட்டங்களில் பல்வேறு வகையில் உயர்ந்தும் குறைந்தும் வந்துள்ளன. அவை ஒருபோதும் ஒரு படித்தாக நேர்க்கோடாக இருந்ததில்லை. ஒரு லட்சம் ஆண்டுகளுக்கு முன்பான பனியுக காலங்களில் இன்றைய பல ஐரோப்பிய நாடுகள் இரண்டு கிலோ மீட்டர் பருமனுடைய பனியால் மூடிக் கிடந்தன. பனியுகம் முடிந்த காலகட்டத்தில், கடல் மட்டம் உயர்ந்த காரணத்தால் வெவ்வேறு வகையில் நமது புவியின் வரைபடம் மாறி வந்துள்ளது.

இவ்வாறு, இயற்கையின் வரலாற்றுப் போக்கில் இயல்பாக ஏற்பட்ட மாற்றங்களினால் பெரும் பல்லி இனங்கள், மம்மோத்துகள், கூண்டோடு அழிந்துள்ளதை நாம் அறிவோம். தொல் எச்ச ஆய்வுகள் இவ்வுண்மையை உறுதிச் செய்கின்றன. ஆனால் இன்று நாம் கண்டு வருகிற அழிவுகள், இயற்கையின் இயல்பான போக்கில் ஏற்படும் மாற்றங்களினால் நடப்பவையாக இல்லை. இன்றைய இருபத்தியொன்றாம் நூற்றாண்டில் கூர்மையடைந்து வருகிற சூழலியல் நெருக்கடிகளுக்கு, மனித சமூகமே முதல் காரணமாகவும் இறுதிக் காரணமாகவும் இருக்கிறது. தொழில்யுகக் காலத்தில் அளவுக்கதிகமாக எரிக்கப்பட்ட புதைபடிம எரிபொருள்கள் புவியின் வளிமண்டலத்தில் அதிகமான அளவில் மீத்தேன், கரிமம் போன்ற பசுமைக் குடில் வாயுக்களை சேர்க்கிறது. அந்த வகையில் தொழில் யுகக் காலகட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 200 பில்லியன் டன் கரிம வாயு புவியின் வளிமண்டலத்தில் சேர்ந்துள்ளது. வளிமண்டலத்தில் அளவுக்கதிகமாக திணிக்கப்படுகிற பசுமைக் குடில் வாயுக்களே காலநிலை மாற்றத்திற்கு முக்கியக் காரணமாக உள்ளன.

அதாவது, வளிமண்டலத்தில் மிகையாக திணிக்கப்படும் பசுமைக்குடில் வாயுக்களின் உமிழ்வால், பசுமைக்குடில் அடுக்கானது அதிக அளவிலான சூரிய வெப்பக் கதிர்களை பூமிக்குள் ஈர்த்து அனுப்பத் தொடங்குகிறது. இதனால் புவியின் சராசரி வெப்பநிலை, நாளுக்குநாள் உயர்வதோடு வளிமண்டலத்தின் தட்பவெப்ப சமநிலையை சீர்குலைய வைக்கிறது.

மீத்தேன் மற்றும் கரிம வாயு போன்றவை அதனதன் அளவுக்கும் பண்புக்கும் ஏற்ற வகையில் வளிமண்டலத்தில் இருப்பதால் மட்டுமே செவ்வாய் கிரகம் போன்றோ வெள்ளிக் கிரகம் போன்றோ அதிக வெப்பத்தோடு அல்லாமல் உயிர் வாழ்வதற்கான சாத்தியத்தை நமது கோளுக்கு வழங்குகிறது. அந்த வகையில் புவியின் வளிமண்டலத்தில் இயல்பான அளவில் உள்ள மீத்தேனும், கரிம வாயுவும் அதன் இயல்பிலிருந்து உயர்ந்து அடர்த்தி கூடுவதால், சூரியனிலிருந்து அதிகளவில் வெப்பத்தை புவிக்குள் ஈர்த்து அனுப்புவதற்கு காரணமாகிறது. விளைவு, அதன் புவியின் காலநிலையில் அசாதாரண மாற்றம், பருவ மழையில் மாற்றம், வெப்பநிலை உயர்வு என சங்கிலித் தொடர் மாற்றங்கள் புவியில் ஏற்படுகிறது.

### முதலாளித்துவ தீர்வுகள்:

புவி வெப்ப மயமாக்கலுக்கு தீர்வாக மிகை உற்பத்தி முறையை, தேவைக்கான உற்பத்தியாக மாற்ற வேண்டும். இது லாப விதிக்கு சவக்குழி தோண்டுவதாக இருக்கும். எனவே அதை மடைமாற்றும் விதமாக பெரும் தொழில் நிறுவனங்களும் அவர்களுக்கு சார்பான பொருளாதார நிபுணர்களும் மேற்கொள்கிற சூழலியல்வாதமானது, உற்பத்திப் பொருளுக்கு ECO FREE, ORGANIC, SUSTAINABLE, CAP AND TRADE, REDD, REDD+ என பச்சை சாயம் பூசுவதை சூழலியல்வாத கொள்கைகளின் வாயிலாக கச்சிதமாகச் செய்கிறது. இந்த ஏகாதிபத்திய சூழலியல்வாத கருத்தியலை சர்வதேச சமூகத்திடம் கொண்டு சேர்க்கிற கடமையை 1990 களின் தொடக்கத் திலிருந்து ஐ.நா. மேற்கொண்டு வருகிறது.

கடந்த கால் நூற்றாண்டுகளாக புவி வெப்ப மயமாக்கல் பிரச்சனை குறித்து ஐ.நா.வின் காலநிலை மாநாடுகளில் விவாதிக்கப்பட்டவை, தீர்மானம் நிறைவேற்றியவை அடுத்தடுத்த மாநாடுகளில் காலாவதி ஆகிவருகிறது.




மேலும் கூடிப் பேசி கலைந்த பிறகு, மாநாட்டு முடிவுகளின்படி எந்தவொரு தீர்மானகரமான இலக்குகளும் இதுநாள் வரை எட்டப்படவில்லை.

குறிப்பாக, 2016 ஆம் ஆண்டு பிரான்ஸ் தலைநகர் பாரீசில் நடைபெற்ற ஐ.நா. காலநிலை மாநாடு முக்கியமான பிரகடனம் ஒன்றை வெளியிட்டது. அவை வருமாறு

இந்த நூற்றாண்டின் இரண்டாம் பாதிக்குள்ளாக பசுமைக் குடில் வாயுக்களின் வெளியேற்றம் மற்றும் அதை உறிஞ்சுவதற்கு இடையிலான சமநிலை எட்டப்படும்.

புவியின் சராசரி வெப்பநிலை 2 டிகிரிக்கு மேல் உயராமல் இருப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும், அதேநேரத்தில் 1.5 டிகிரிக்குள் கட்டுப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை இது குறித்து விவாதிக்கப்படும்.

வளர்ந்தநாடுகள் 2020 ஆம் ஆண்டிற்குள் நூறு பில்லியன் டாலர் நிதியை வளரும் நாடுகளுக்கு வழங்கும், எதிர்காலத்தில் இந்நிதி அதிகரிக்கப்படலாம்."

ஆனால் வழக்கம் போல இந்த பாரீஸ் பிரகடனத்தை எந்த நாடும் கண்டுகொள்ளவில்லை. அண்மையில் "பருவநிலை மாற்றத்திற்கானப் பன்னாட்டு அரசுக் குழு (IPCC AR6) வெளியிட்ட அறிக்கையின் படி, ஒவ்வொரு ஆண்டிலும் சுமார் ஆயிரம் பில்லியன் டன் கரிவாயு வளிமண்டலத்தில் வெளியிடப்படுவதாகவும், இவை சராசரியாக 0.45 டிகிரி அளவுக்கு வெப்பநிலையை உயரச் செய்கிறது என்றும் எச்சரிக்கிறது.

வளிமண்டலத்தில் உமிழப்படும் கரிவாயுவை கட்டுப்படுத்துவதாக ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு மாநாட்டிலும் உறுதி கூறுகிறது. இந்தியாவின் சார்பாக 26 வது உச்சி மாநாட்டில் பேசிய பிரதமர் மோடி, பருவநிலை மாற்றத்தை எதிர்கொள்ள இந்தியா ஐந்து அம்சம் கொண்ட திட்டம் வைத்துள்ளதாகவும் அதற்கு பஞ்சாமிர்த திட்டம் எனப் பெயரிட்டு மாநாட்டில் முன்வைத்தார். இந்த திட்டத்தின்படி இந்தியா தனது புதுப்பிக்கத்தக்க ஆற்றல் திறனை 2030க்குள் 500 ஜிகாவாட்டாக எட்டுவதாகவும் , 2030 ஆம் ஆண்டில் எரிசக்தி தேவைகளில் 50 சதவீதத்தை புதுப்பிக்கத்தக்க ஆற்றலில் இருந்து பெறப்போவதாகவும், 2030 ஆம் ஆண்டுக்குள் மொத்த கரியமில வாயு வெளியேற்றத்தை ஒரு பில்லியன் டன்கள் குறைக்கப் போவதாகவும் கூறினார்.

இதேபோல அமெரிக்காவும், இதர ஐரோப்பிய ஒன்றிய நாடுகளும் பல்வேறு திட்டங்களை முன்மொழிந்தன. ஆனால் எதுவும் நடைமுறைக்கு வரவில்லை.

பருவநிலை மாற்றத்திற்கான பன்னாட்டு அரசுக் குழு (IPCC AR6) வெளியிட்ட அறிக்கை, வளர்ந்து வரும் நாடுகளை விட வளர்ந்த நாடுகள் அதிகளவில் கரிவாயுவை வளிமண்டலத்தில் வெளியிடுகின்றன என்பதை சுட்டிக்காட்டியது. உலக மக்கள்தொகையில் 24 விழுக்காடு பங்களிப்பு செய்கிற தெற்காசியப் பிராந்திய நாடுகள் வெறும் நான்கு விழுக்காடு கரிவாயுவையே வெளியிடுகிறது.

தற்போது காலநிலை மாற்ற மாநாடுகளின் மையம், வளர்ந்த நாடுகளின் கரிப்புகை வெளியேற்ற அளவுக்கும் வளர்ந்துவரும் நாடுகளின் கரிப்புகை வெளியேற்ற அளவுக்குமான முரண்பாடாகவும் முற்றுகிறது. வளர்ந்த நாடுகள் வளர்ந்துவரும் நாடுகளின் தொழில்வளர்ச்சியை புதிப்பிக்கத்தக்க ஆற்றலில் திசை மாற்றக் கோருகின்றன. மாறாக வளர்ந்த நாடுகளோ தாங்கள் வழங்கிய உறுதிமொழியை பின்பற்றுவதில்லை. நிலக்கரி பயன்பாட்டை குறைத்துக் கொள்வதாக உறுதி வழங்கிய ஐரோப்பிய நாடுகள் தற்போது நடைபெறும் ரஷ்யா உக்ரைன் போரால் ஆற்றல் தட்டுப்பாடு ஏற்பட்டு, மீண்டும் அனல் மின் நிலைய மின் உற்பத்தியைத் தொடங்கிவிட்டன.

இப்படியான சூழலில், காலநிலை மாற்றத்திற்கான 28 வது உச்சி மாநாடு நடைபெறுகிறது. இதில் என்ன முடிவுகள் எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்த நேரத்தில் ஐ.நா.வின் காலநிலை மாநாடு குறித்து வேடிக்கையாக கூறப்பட்ட கீழ்வரும் வாசகம் நினைவுக்கு வருகிறது.

"நாங்கள் ஒருபோதும் கடமை யுணர்வுடன் செயல்பட மாட்டோம் என்பதைக் கடமையாகக் கொண்டுள்ளோம்; அதேவேளையில் நாங்கள் நல்லவர்களாகவும், ஒருவருக்கொருவர் உதவி செய்துகொண்டும், ஒவ்வொராண்டும், ஏன் காலம் பூராவும் இதேபோலக் கூடிப் பேசுவோம் என உறுதியளிக்கிறோம்"

தொடர்புக்கு: 98423 91963)

# எழுச்சியோடு தொடரும் இளைஞர் பெருமன்ற உறுப்பினர் பதிவு இயக்கம்...

















இந்தியநாட்டின் விடுதலைக்காக போராடிய மாவீரன் பகத்சிங், ராஜகுரு,சுகதேவ் ஆகியோரின் திசைவழியில் விஞ்ஞான சோசலிச லட்சியத்திற்காக போராடி வரும் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம். கன்னியாகுமரி முதல் காஷ்மீர் வரை இளைஞர்களை சாதி மதங்களுக்கு அப்பாற்பட்டு ஒன்றுபடுத்தி வருகிறது.

ஒன்றிய ஆட்சியில் இருக்கும் பா.ஜ.க கடந்த ஒன்பதரை ஆண்டுகளில் கொண்டு வந்த நாசகர திட்டங்களான தேசிய கல்வி கொள்கை, நீட்தேர்வு, விஸ்வகர்மா யோஜனா, குடியுரிமை திருத்தச்சட்டம், ஜிஎஸ்டி ஆகியவற்றோடு ஒன்றிய அரசின் மோசமான அரசியல் பொருளாதார கொள்கையை எதிர்த்து போராடிவருகிறது....

உலகிலேயே அதிகமான இளைஞர்களை கொண்ட இந்தியாவில் அந்த இளைஞர்களின் உழைப்பு சக்தியை முறையாக பயன்படுத்தினால் இந்தியா மிகுந்த வளர்ச்சியடைந்த நாடாக மாறும்.

ஆனால் பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் ஆட்சி வருவதற்கு முன் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்பை வழங்குவோம் என கூறிவிட்டு தற்போது படித்த இளைஞர்கள் பக்கோடா விற்று பிழைப்பு நடத்துங்கள் எனக்கூறுகிறார்.

அம்பானிக்கும், அதானிக்கும் சொத்து சேர்க்க சொத்துக்களை அதிகரிக்க சேவை செய்யும் பிரதமர் இந்திய இளைஞர்களை கண்டு கொள்ளவில்லை. இதனால் கடந்த 4 நான்கு ஆண்டுகளில் மட்டும் வேலையின்மை காரணமாக 10 ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் தற்கொலை செய்து கொண்டதாக தேசியக்குற்ற ஆவணக் காப்பகம் தெரிவித்துள்ளது...

இந்நிலையில் இளைஞர்களின் வேலையின்மை பிரச்சினையை திசைதிருப்ப சாதி,மதங்களின் பெயரால் கலவரங்களை திட்டமிட்டு ஒன்றிய அரசே உருவாக்குகிறது. அதற்கு பற்றி எரியும் மணிப்பூர் ஓர் உதாரணம்.

ஆகவே இந்திய இளைஞர்களை ஒன்றுபடுத்த வேண்டும் சமத்துவ சிந்தனையை வளர்த்தெடுக்க வேண்டும் என களம் கண்டு போராடிவரும் அனைத்திந்தியஇளைஞர்பெருமன்றத்தின் உறுப்பினர் பதிவு இயக்கம் தமிழ்நாடு முழுவதும் எழுச்சியோடு நடைபெற்று வருகிறது.

நவம்பர் 19ம் தேதி தொடங்கிநடைபெற்று வரும் உறுப்பினர் பதிவு இயக்கத்தின் காரணமாக 1 லட்சத்துக்கும் அதிகமான இளைஞர்கள் அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தில் இணைந்துள்ளர். மேலும் உறுப்பினர் பதிவை விரிவுபடுத்த கிளை மாநாடுகள்,கிளைப்பேரவைகள், இடைக்கமிட்டி பேரவைகள், அரசியல் பயிலரங்குகளுக்கு தமிழ்நாடு முழுவதும் திட்டமிடப்பட்டுள்ளது.

5லட்சம் இலக்கை நிச்சயம் எட்டுவோம்.

ஒன்றிய பா.ஜ.க அரசை உறுதியாக வீழ்த்துவோம்

வெல்லட்டும் சோசலிசம்
















த.லெனின்

# அரசமைப்பு தினம் கொண்டாடவா? கொன்றொழிக்கவா?



**“பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே” என்கிறது நன்னூல். ஒரு சமூகமோ, நாடோ முற்போக்கு வழியில் பயணிக்க வேண்டுமாயின் பழமை எனும் சட்டை உரித்து புதுமை எனும் புத்தாடை அணிவது மிகவும் அவசியமாகும்.**

அந்த வகையில் தான் இந்தியாவின் நீதித்துறை ஒரு சுதந்திரமான ஜனநாயக அங்கமாக செயல்பட வேண்டியுள்ளது

உச்ச நீதிமன்ற, உயர் நீதிமன்ற நீதிபரிபாலனத்திற்கும் அதிகார வரம்புக்கும் அரசியல் சாசனம் பல வகைகளில் வழி அமைத்துள்ளது. சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துவதற்கும் மக்களின் அடிப்படை உரிமைகளை பாதுகாப்பதற்கும் ஏன் அரசமைப்பு சட்டத்தின் பாதுகாவலனாகவும் விமர்சனங்கள் பல இருந்தாலும் நீதித்துறையே இன்று வரை செயல்பட்டு வருகிறது.

எந்தவித பாகுபாடுமின்றி வாழ்வதற்கான உரிமைகளை அரசியலமைப்பு உறுதி செய்துள்ளது. பல்வேறு சமயங்கள் மற்றும் சமயங்களைச் சேர்ந்தவர்களை சமத்துவத்துடனும், நல்லிணக்கத்துடனும் வாழ இது இடம் அளித்துள்ளது. அரசியலமைப்பை விட பெரிய ஒன்று இந்தியாவில் இல்லை. இந்தியர்களாகிய நாம் அரசியல் சட்டத்தை மீற யாருக்கும் உரிமையோ அதிகாரமோ இல்லை. இறுதி அதிகாரம் மக்கள் கையில் உள்ளது. இந்திய மக்களுக்கே இறையாண்மை !. இந்தியாவை ஆள்வது மக்கள்தான் !



## ஆன்மாவை அழிக்கும் முயற்சி

அரசியலமைப்பு தினம் நவம்பர் 26, 1949 அன்று இந்திய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டதை நினைவுகூரும் வகையில் கொண்டாடப்படுகிறது. டாக்டர் பி.ஆர்.அம்பேத்கரின் 125வது பிறந்தநாளின் போது அரசியலமைப்பு தினத்தை கொண்டாட பாஜக அரசு முடிவு செய்தது. ஆனால் அது ஆர்எஸ்எஸ் வழியில் அரசியலமைப்புச் சட்டத்தின் ஆன்மாவை அரித்தெடுக்கும் முயற்சியில் தினம்தோறும் ஈடுபட்டு வருகிறது. எனவே தான் கவர்னர்களைக் கொண்டு நமது கூட்டாட்சி தத்துவத்தை சிதைத்து காட்டாச்சியை நிறுவ முயல்கிறது. ஒற்றை ஆட்சி என்று உறுதிப்பட பேசி தனது சர்வாதிகாரப் பற்றையே எப்போதும் உயர்த்தி பிடித்து வருகிறது.

ஒருபுறம் அரசமைப்பு நாளை கொண்டாடுகிறார்கள். மறுபுறம் குரங்கு தனது குட்டியை விட்டு ஆழம் பார்ப்பது போல அரசமைப்புச் சட்டத்திற்கு எதிரான கருத்துக்களை தொடர்ந்து பரப்பி வருகிறது

அந்தவகையில் சென்னை பெருங்குடியில் அமைந்துள்ள தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற அரசமைப்பு தின நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பேசிய தமிழக ஆளுநர் ஆர்.என். ரவி, “இந்திய அரசியலமைப்புச் சட்டம் முழுமை பெறாத ஆவணமாக உள்ளது. என்றும் மிகுந்த அழுத்தங்களுக்கு இடையே அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறி உள்ளதா? என்பது குறித்து விவாதிக்க வேண்டிய நேரம் இது. நீதிமன்றங்களில் மட்டும் இல்லாமல் சட்டப் பல்கலைக்கழகங்களிலும் அரசமைப்புச் சட்டம் குறித்து விவாதிக்க வேண்டும்.

சுதந்திரத்திற்காக போராடும்போது நாம் ஒற்றுமையாக இருந்தோம். தற்போது அவரவர் தாய் நிலம் என்றும், தாய்மொழி என்றும் பிரிந்து கிடக்கிறோம். மாநிலங்கள் என்ற அளவில் பிரித்து வைக்கப்பட்டுள்ளோம். நம்மிடையே பிரிவினையை ஏற்படுத்தும் பல்வேறு கருத்துகள் இங்கே உள்ளன. தற்போதைய காலத்தில் சாதாரண மக்களுக்கு நீதி கிடைப்பது விலை உயர்ந்ததாக உள்ளன என்றும் பேசியுள்ளார் தமிழக ஆளுநர் ரவி.

அரசமைப்புச் சட்டம் அன்று நமது அரசியல் அமைப்பு நிர்ணய சபையில் நீண்ட விவாதங்களுக்கு பிறகு நிறைவேற்றப்பட்ட போது நமது நாட்டில் எல்லா காலத்திற்கும் பொருத்தமான மனு சட்டம் இருக்கும் போது அதற்கு மேல் இது ஏன்? என்று வினா தொடுத்தவர்கள் தான் ஆர்எஸ்எஸ் அமைப்பினர்.


அரசமைப்புச் சட்டம் வலியுறுத்தும் கூட்டாட்சி முறைக்கு எதிராக ஆர். எஸ். எஸ். எப்போதும் இருந்து வந்திருக்கிறது இப்போது கூட அவர்கள் முன்வைக்கிற ஒற்றை ஆட்சி என்பதற்கு அரசமைப்புச் சட்டத்திலேயே இடம் உண்டு என்று நமது நெருக்கடி காலத்திற்காக உருவாக்கப்பட்ட பிரிவு352இல்இருந்து360வரைஉள்ளவற்றை குறிப்பிடுகின்றனர். ஆனால் இது குறித்து தனது கடைசி உரையில் பேசிய டாக்டர் அம்பேத்கர்பல விவாதங்களுக்குப் பிறகு இந்த நெருக்கடி கால செயல்பாட்டுக்கான பிரிவுகள் உருவாக்கப்பட்டதாகவும் ஆனால் ஒட்டுமொத்த அவையின் மனநிலை என்பது இந்த பிரிவுகள் அனைத்தும் இறந்து போன சொற்களாகவே இருக்க வேண்டும் என்று விரும்பியதாகவும் குறிப்பிட்டார். அத்துடன் கூட்டாட்சி முறைதான் மிகச் சிறந்த ஒன்று என்பதையும் டாக்டர் அம்பேத்கர் மிக அழுத்தமாக கூறியுள்ளார். ஆனால் இதை பற்றி எல்லாம் கவலை கொள்ளாத இந்துத்துவ ஆர் எஸ் எஸ் – பாஜக அவரது நோக்கத்திற்கு முரணாகவே அவரை கொண்டாடுவதன் பேரில் மிகப்பெரிய தனது பாசிச அரசியலை இப்போதும் மேற்கொண்டு வருகிறது

தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவிக்கும், தமிழக அரசுக்கும் இடையே மோதல் போக்கு நிலவி வருகிறது. சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போடுவதால் தமிழக அரசு ஆளுநருக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்துள்ளது. இதற்கிடையே, பஞ்சாப் ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கில் அண்மையில் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி அமர்வு தீர்ப்பளித்தது.

## வேறு வழியில்லை

மாநிலத்தின் ஆளுநராக அரசியலமைப்பில் சில அதிகாரங்கள் இருந்தாலும், அவற்றைக் கொண்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத்தின் அதிகாரத்தை முறியடிக்க முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளுக்கே உண்மையான அதிகாரம் இருக்கிறது என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. பிரிவு 200 சுட்டிக்காட்டி கவர்னரால் திருப்பி அனுப்பப்பட்ட சட்ட முன்னறிவுகளை மீண்டும் சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பினால் அதற்கு ஒப்புதல் அளிப்பதை தவிர வேறு வழியில்லை என்று ஓங்கி குட்டி இருப்பது அவருக்கு உறுத்தலாக மாறிவிட்டது போலும். அதனால்தான் இப்படிப்பட்ட உரையை அவர் ஆற்றியிருப்பதாகவே கருத வேண்டி உள்ளது

நமது கேள்வி என்னவெனில் அந்த அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படையில்





தானே அவர் பதவி பிரமாணம் எடுத்துக் கொண்டார் எனவே அந்த பதவி முழுமையானதா அரைகுறையானதா? பதில் சொல்லட்டும் !

இது ஒரு அரசியல் சாசன பதவி என்பதால் தான் அவர் பணியாற்றுவதற்கு நேரம் காலம் நிர்ணயிக்கப்படவில்லை. ஒருவேளை இப்படியே அவர் தொடர்ந்தால் உரிய விதிமுறைகளை உருவாக்கி பல்வேறு அரசு அலுவலகங்களில் நடைமுறையில் உள்ள பயோ மெட்ரிக் வருகை பதிவேடு முறையை கூட எதிர்காலத்தில் கொண்டு வரக்கூடும்.

## சட்டம் ஒழுங்கு

ஏற்கனவே பேரறிவாளன் விடுதலை குறித்த வழக்கில் மாநில சட்டமன்றம் ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பிய அவரது விடுதலை குறித்தான தீர்மானத்தை தொடர்ந்து கிடைப்பில் போட்டு வைத்திருந்ததுடன் உச்ச நீதிமன்றம் இதை கேள்வி கேட்டவுடன் அதனை குடியரசுத் தலைவரின் பரிசினைக்கு அனுப்பியதாக கூறினார்கள். நீதிமன்றத்தில் ஒன்றிய அரசின் வழக்கறிஞரும் இது சிபிஐ விசாரித்த வழக்கு என்பதால் இதனை தீர்மானிக்க ஒன்றிய அரசால் தான் இயலும் என்று பேசி வந்த நிலையில் குற்றவியல் நடவடிக்கைகள் மாநில அரசின் சட்ட ஒழுங்கு அமைப்புக்குள் வருவதால் அது மாநில அரசின் உரிமை என்று தமிழ்நாடு அரசு வாதிட்ட நிலையில் இதில் தலையிட்ட நீதிபதிகள் உடனடியாக இதில் நீங்கள் இந்திய அரசு கருத்து சொல்லவில்லை என்றால் உச்ச நீதிமன்றமே தனது அதிகாரத்தை பிரிவு 144 ஐ பயன்படுத்தி தீர்ப்பை அளித்து விடும் என்று கூறினார். அதன் பின்பு அப்படியே விடுதலை செய்தனர் என்பதும் மிக முக்கியமான ஒன்றாகும்

இதேபோன்று ஒரு நிகழ்ச்சியில் பேசிய நாட்டின் துணை குடியரசுத் தலைவர் நாடாளுமன்றத்திற்கு நீதிமன்றங்களை காட்டிலும் அதிக அதிகாரம் உள்ளது என்று பேசி இருப்பது அதைவிட மிகப்பெரிய மோசடியாகும்.

## அரசமைப்பின் நீட்டிப்பு

அரசமைப்பு தின விழாவில் கலந்து கொண்டு பேசிய நாட்டின் உச்ச நீதிமன்ற நீதிபதி,சந்திர சூட் நாட்டின் அனைத்து குடிமக்களும்சட்ட அமைப்பில் நம்பிக்கையை நிலைநிறுத்தவும், நீதிமன்றங்களை தங்கள் உரிமைகள் பாதுகாக்கப்படும் ஒரு தளமாக பார்க்கவும் விரும்புவதாக கூறினார்.

“தனிநபர்கள் நீதிமன்றங்களுக்குச் செல்வதற்குப் அச்சப்படவோ அல்லது கடைசி முயற்சியாகக் கருதவோ கூடாது. மாறாக, நீதிமன்ற முயற்சியால், ஒவ்வொரு வகுப்பு, சாதி மற்றும் மதத்தைச் சேர்ந்த குடிமக்களும் நீதிமன்ற அமைப்பு மீது நம்பிக்கை வைத்து, உரிமைகளை அமல்படுத்துவதற்கான நியாயமான, பயனுள்ள மன்றமாக அதைப் பார்க்க முடியும் என்பது எனது நம்பிக்கை,” என்று உச்ச நீதிமன்றத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

சில சமயங்களில், ஒரு சமூகமாக நாம் அவமானகரமான சிக்கலாக ஒரு வழக்கின் மீது முகம் சுளிக்கலாம். ஆனால் அரசியலமைப்பு நமது அரசியல் வேறுபாடுகளை நிறுவப்பட்ட ஜனநாயக நிறுவனங்களின் செயல்முறைகள் மூலம் தீர்க்க அனுமதிப்பது போல்,நமது பல கருத்து வேறுபாடுகளையும் தீர்க்க நமது நீதிமன்ற அமைப்பு உதவுகிறது.

இந்த வகையில், நாட்டில் உள்ள ஒவ்வொரு நீதிமன்றத்திலும் உள்ள ஒவ்வொரு வழக்கும் அரசியலமைப்பு நிர்வாகத்தின் நீட்டிப்பாகும்,” என்று அவர் தெரிவித்தார்

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில்ஒன்றான நீதித்துறை அரசமைப்பு சட்ட அறம் சார்ந்து சிந்திக்கும்போது ஆர் எஸ் எஸ் – பாஜகவும் தனது இந்துத்துவ நிகழ்ச்சி நிரலை நிலை நாட்ட அதே நாளை தனக்கு சாதகமாக பயன்படுத்துவதும் எதைக் காட்டுகிறது? ஒரு சுதந்திரமான நீதித்துறை தான் சட்டத்தை விளக்கும் சச்சரவுகளை தீர்த்து வைக்கும் அனைத்து குடிமக்களுக்கும் நீதி வழங்கும் அது அரசாங்கத்தின் கிளை அல்ல என்பதை புரிந்து பொறுப்புடன் கடமை ஆற்றவும் செய்யும். அமெரிக்க சட்ட வல்லுனர் அலெக்சாண்டர் ஹாமில்ட்டன் கூறுவது போல ஒரு சுதந்திரமான நீதித்துறையே அரசமைப்புச் சட்டத்தின் ஆன்மா. அந்த ஆன்மா சிதைவுராமல் பாதுகாக்கப்பட விடுதலைப் போராளிகளின் வழியே சிந்திப்போம் செயல்படுவோம் !

தொடர்புக்கு: 9444481703

# கார்ப்பரேட் கொள்ளையிலிருந்து விடுதலை பெற போராட்டம்

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா அழைப்பு

கார்ப்பரேட் கொள்ளையில் இருந்து விடுதலை பெற நாம் போராட வேண்டும். சமூக சமத்துவத்திற்காக, சமூக நீதிக்காக நாம் போராட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா அழைப்பு விடுத்தார்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் நான்காவது மாநில மாநாட்டை தொடங்கி வைத்து அவர் ஆற்றிய உரை வருமாறு:

இன்றைய நாள் இந்திய வரலாற்றில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நாள். புரட்சியாளர் அம்பேத்கர் அரசியலமைப்பு சட்டத்தின் இறுதி வரைவை அரசியல் நிர்ணய சபையில் முன்வைத்து உரையாற்றிய நாள். அதன் பிறகு தான் அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தது.

அரசியல் நிர்ணய சபையில் அரசியலமைப்புச் சட்டத்தை தாக்கல் செய்து அம்பேத்கர் ஆற்றிய உரையில், "இந்தியா புதிய வாழ்க்கைக்குள் நுழைகிறது. ஆனால், நாம் முரண்பாடுகள் நிறைந்த வாழ்க்கைக்குள் நுழைய இருக்கிறோம். அரசியலில் நாம் சமத்துவத்தைப் பெற்றிருப்போம். சமூக பொருளாதார வாழ்வில் ஏற்றத்தாழ்வுகளைப் பெற்றிருப்போம். அரசியலில் ஒருவருக்கு ஒரு வாக்கு; ஒவ்வொரு வாக்குக்கும் ஒரே மதிப்பு என்றிருக்கும். நமது சமூக பொருளாதார வாழ்விலோ நமது சமூக பொருளாதார கட்டமைப்பின் காரணமாக ஒரு மனிதன் ஒரு மதிப்பு என்ற கோட்பாட்டைத் தொடர்ந்து நிராகரிப்பவர்களாக இருப்போம். எவ்வளவு காலத்துக்கு இந்த முரண்பட்ட வாழ்வை வாழப்போகிறோம்?" என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கேள்வியை எழுப்பினார்.

விடுதலை பெற்ற இந்தியாவில் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். ஆனால் சமத்துவத்துக்காக இன்னும் போராட வேண்டியிருக்கிறது.

நம்முடைய அரசியலமைப்புச் சட்டத்தின் முகவுரை (Preamble) தெளிவாக சொல்லி இருக்கிறது. சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் என்ற இலக்குகளை எட்ட வேண்டும். எல்லோருக்கும் நீதி என்ற இலக்கை நோக்கிப் பயணிக்க வேண்டும். அதாவது, சமூக, அரசியல் பொருளாதாரத்தில் அனைவருக்கும் நீதி கிடைத்திட வேண்டும்.

நாடு விடுதலை பெற்று 75 ஆண்டுகள் ஆன பிறகும், நம்முடைய நாடு இன்னும் போராடிக் கொண்டிருக்கிறது. எல்லோருக்கும் எல்லாம் கிடைத்திட போராடிக் கொண்டிருக்கிறது.

எல்லோருக்கும் எல்லாம் என்கிற போது கல்வி, மருத்துவம், வேலைவாய்ப்பு குடியிருப்பு, உண்பதற்கான உணவு இவை நம்முடைய மக்களின் அடிப்படைத் தேவைகள். இவை அடிப்படை உரிமைகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். ஆனால் இந்தியாவில் இது நடைபெறவில்லை. அதனால்தான் இன்றைக்கு போராட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. டாக்டர்கள் மட்டுமல்ல, தொழிலாளர்கள் போராடுகிறார்கள். விவசாயிகள் போராடுகிறார்கள். விவசாயத் தொழிலாளர்கள் போராடுகிறார்கள். உழைக்கக் கூடிய மக்கள் பகுதி அனைவரும் இன்றைக்கு போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

இதுவரை நம்முடைய அரசு பின்பற்றிக் கொண்டிருக்கும் கொள்கைகளை மறுஆய்வுக்கு உட்படுத்த வேண்டும். தற்போதைய ஒன்றிய மோடி அரசு ஆட்சிக்கு வந்தவுடன்,

ஒரு நாடு ஒரு கலாச்சாரம்;

ஒரு நாடு ஒரு மதம்; '

ஒரு நாடு ஒரு மொழி;

ஒரு நாடு ஒரு வரி;

ஒரு நாடு ஒரு ரேஷன்;

ஒரு நாடு ஒரு தேர்தல்;

ஒரு நாடு ஒரு தேர்வு;

ஒரு நாடு ஒரே மருத்துவ முறை

என புகுத்த நினைக்கின்றனர்.

இந்தியா பன்முகத் தன்மை கொண்ட நாடு, ஆனால் இந்தியாவை ஒற்றைப் பரிமாணம் கொண்ட நாடாக மாற்ற வேண்டும் என்பது ஒன்றியத்தில் ஆளும் பாஜகவின் கருத்தியலாக உள்ளது. இதனால் இந்தியா புதிய பிரச்சனைகளை எதிர்கொண்டிருக்கிறது.

நாடு விடுதலை பெற்று 75 ஆண்டுகள் கடந்த பிறகு, அமிர்தப் பெருவிழா கொண்டாடும் நேரத்தில் இந்திய மக்கள் எப்படி வாழ்கிறார்கள்? பட்டினிக் குறியீட்டில் உலகின் 120 நாடுகளில் 111வது நாடாக இந்தியா உள்ளது. இந்த நிலை தொடர அனுமதிக்கப் போகிறோமா? இதிலிருந்து மீண்டுவர என்ன செய்யப் போகிறோம்?

அரசு பின்பற்றும் கொள்கைகளை நாம் விமர்சிக்க வேண்டும். அவற்றை மாற்றுவதற்காகப் போராடி, மாற்றம் கொண்டுவர வேண்டும்.

அரசியல் நிர்ணய சபையில் உரையாற்றி அம்பேத்கார், "இந்தியாவில் நிலம் உட்பட உற்பத்தி சாதனங்கள் அனைவருக்கும் பொதுவானதாக, தேச உடைமையாக இருக்க வேண்டும்" என்றார். கல்வி அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும். மருத்துவம் அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும். வேலைவாய்ப்பு அடிப்படை உரிமையாக இருக்க வேண்டும். இவை அனைத்தும் டாக்டர்களின் பிரச்சனை மட்டுமல்ல. இந்திய சமூகத்தின் பிரச்சனை. இந்திய சமூகத்தில் ஒரு அங்கமாக டாக்டர்களும் இருப்பதால் இந்தப் பிரச்சனைகளை அவர்களும் எதிர்கொள்கின்றனர்.

இந்தியாவில் மருத்துவத்துறை தனியார் மயமாகிக் கொண்டிருக்கிறது. வணிக மயமாகிக் கொண்டிருக்கிறது. இது பல்வேறு பிரச்சனைகளை உருவாக்கி இருக்கிறது. கொரோனா காலத்தில் நம் நாட்டின் சுகாதாரத்துறை கட்டமைப்பின் குறைபாடுகள் பட்டவர்த்தனமாகத் தெரிந்தது.

மருத்துவத்துறைக்கு, மருத்துவக் கட்டமைப்புக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தியில், ஜிடிபியில் வெறும் 2.15 விழுக்காடுதான் செலவிடப்படுகிறது. ஆனால் மருத்துவத்துறைக்கு ஜிடிபியில் 6 விழுக்காடு செலவிடப்பட வேண்டும் என நாம் வலியுறுத்துகிறோம்.

கல்விக்கு எவ்வளவு செலவிடப்படுகிறது? 1960 ஆம் ஆண்டில் கோத்தாரி ஆணையம் குறைந்தது ஜிடிபியில் 6 விழுக்காடு செலவிடப்பட வேண்டும் என வலியுறுத்தியது. ஆனால் அரசு அதற்குத் தயாராக இல்லை.

இன்றைக்கு சுகாதாரத்துறையை, மருத்துவ உள்கட்டமைப்பை வலுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். இது டாக்டர்களின் தனிப் பிரச்சனை மட்டுமல்ல. பொதுப் பிரச்சனையுடன் இணைந்ததாகும். பொதுப் பிரச்சனை என்றால், காலனிய அடிமைத்தளையில் இருந்து விடுதலை பெற வேண்டியிருந்தது. போராடி விடுதலை பெற்றோம். ஆனால் இன்றைக்கு கார்ப்பரேட் கொள்ளையில் இருந்து விடுதலை பெற போராட வேண்டியிருக்கிறது. சமூக மாற்றத்திற்காக, சமூக சமத்துவத்திற்காக, சமூக நீதிக்காக போராட வேண்டியிருக்கிறது. அதற்காகப் போராட உறுதியேற்போம் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா அழைப்பு விடுத்தார்.

# நவீன அறிவியல் மருத்துவத்தைக் காத்தி

## சமூக சமத்துவத்திற்கான டாக்

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் தமிழ்நாடு மாநில நான்காவது மாநாடு மற்றும் 20 ஆம் ஆண்டு விழா 26.11.2023 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் டாக்டர் த.அறம் தலைமை தாங்கினார். இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் டி.ராஜா மாநாட்டைத் தொடங்கி வைத்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துரை காணொலியில் ஒளிபரப்பட்டது.



மாநாட்டு சிறப்பு மலரை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் வெளியிட, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கட்டுரை, கவிதை மற்றும் குறும்படப் போட்டிகளில் வெற்றி பெற்ற மருத்துவ மாணாக்கர்களுக்கும், மருத்துவர்களுக்கும் பரிசளித்து, பாராட்டி மாநாட்டு நிறைவுப் பேருரையாற்றினார்.

திருப்பூர் மக்களவைத் தொகுதி உறுப்பினரும் ஏஐடியுசி அகில இந்திய துணை தலைவருமான கே. சுப்பராயன் எம்.பி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி, அணுப்போர் தடுப்பிற்கான சர்வதேச மருத்துவர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர். அருண்மித்ரா, சமாதானம் மற்றும் முன்னேற்றத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் அகில இந்தியச் செயலாளர் டாக்டர் ஏ.ஆர். சாந்தி, கேரள மாநிலச் செயலாளர் டாக்டர் ஷஜித், ஜனநாயக அரசு டாக்டர்கள் சங்கத்தின் மாநிலத் தலைவர் டாக்டர் பி.பாலகிருஷ்ணன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கம் கடந்து வந்த பாதைகளும், எதிர்கால கடமைகளும் பற்றி, சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் உரையாற்றினார்.

தெலுங்கானா மாநிலத்தைச் சேர்ந்த மருத்துவர் கே.ரஜனி, சென்னையைச் சேர்ந்த மகப்பேறு மருத்துவர் டாக்டர் கே.பாலகுமாரி, கேரளத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர் டி.ரோசினரா, திருச்சிற்றம்பலத்தைச் சேர்ந்த டாக்டர் சௌந்திரராஜன் ஆகியோரின் மருத்துவ சேவையை பாராட்டி சிறந்த மருத்துவர் விருது வழங்கப்பட்டது.

மருத்துவர்கள் எம்.காமராஜ்,

# மருத்துவப் படிப்புக்குள் நுழைய

## அமைச்சர் உதயநி

நுழைவுத்தேர்வு என்பதே யாரெல்லாம் நுழையக்கூடாது என்பதற்கான தேர்வுதான் என்பதில் தெளிவாக இருப்பதால்தான் நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றோம் என்று அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார். சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் மாநாட்டில் அவர் ஆற்றிய உரை வருமாறு:




திராவிட இயக்கமாகட்டும், இடதுசாரி இயக்கமாகட்டும் இரண்டுமே சமூகச் சமத்துவத்திற்காகத்தான் தொடர்ந்து போராடி வந்து கொண்டிருக்கின்றன. சமூக சமத்துவத்தைப் பெயரிலேயே கொண்டு செயல்பட்டு வரும் உங்களுடைய சங்கத்தின் பணிகளை பாராட்டுகின்றேன். வாழ்த்துகின்றேன்.

50 நாட்களில் 50 லட்சம் கையெழுத்து இலக்கு என்று அந்தக் கையெழுத்துப் போராட்டத்தைத் தொடங்கினோம். இன்றோடு 39 லட்சம் கையெழுத்துக்களை நாம் பெற்றுள்ளோம். இணையதளத்தின் மூலமாக 29 லட்சமும் போஸ்ட் கார்டுகள் மூலமாக 10 லட்சம் கையெழுத்துகளும் பெற்றுள்ளோம். அடுத்த பத்து பதினைந்து நாட்களுக்குள் அந்த இலக்கை, 50 லட்சம் கையெழுத்துக்களைப் பெற்று இலக்கை அடைவோம் என்று அந்த நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

ஆனால், என்றைக்குத் தமிழ்நாட்டிலிருந்து நீட் முழுமையாக ரத்து செய்யப்படுகின்றதோ அன்றைக்குத்தான் ஒட்டுமொத்த மருத்துவர்களுக்கும், மாணவர்களுக்குமான அந்தப் போராட்டம் வெற்றி பெற்றதாக நாம் கருத முடியும். நீட் எதிர்ப்புக்கான அந்தக் கடிதங்கள், நம்முடைய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பப்பட இருக்கின்றன.

நாம் நீட்டிற்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கும்போது ஒன்றிய அரசு அடுத்து நெக்ஸ்ட் என்ற தேர்வைக் கொண்டு வருகிறார்கள். நெக்ஸ்ட் நாம், நெக்ஸ்ட் தேர்வை எதிர்த்துப் போராட்டத்தை நடத்த வேண்டும். பன்னிரண்டாம் வகுப்பு படிக்கும் மாணவர்கள் மருத்துவப் படிப்பில் நுழைவதற்கு நீட் கொண்டு வந்தார்கள்.

இப்பொழுது மருத்துவம் படிக்கும் மாணவர்கள் பட்டம் பெறுவதற்கு நெக்ஸ்ட் தேர்வைக் கொண்டு வருகிறார்கள். மருத்துவப் படிப்புக்கு உள்ளே நுழைய நீட். படிப்பை முடித்து வெளியே வர நெக்ஸ்ட். இந்தத் தேர்வுகளில் எல்லாம் யார் மருத்துவப் படிப்பு படிக்க வேண்டும் என்பதற்கான தேர்வுகள் அல்ல.

யார் மருத்துவம் படிக்கக் கூடாது என்பதற்கான பாசிச பில்டர்களாக நாம் பார்க்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் மருத்துவப் பட்டம் பெற்ற மாணவர்கள் பி.ஜி. படிப்பதற்கும் நெக்ஸ்ட் கொண்டு வருகிறார்கள். மருத்துவப் படிப்பையும் சுகாதாரத் துறையையும் ஒன்றிய அரசே முழுதாகக் கன்ட்ரோல் செய்யப் பல்வேறு திட்டங்களைத் தொடர்ந்து தீட்டி வருகின்றது ஒன்றிய அரசு. இந்த மாதிரி

# ட! மருத்துவக் கல்வியில் சமூக நீதியை உறுதி செய்திட!

## டர்கள் சங்கத்தின் 4வது மாநில மாநாடு



எஸ்.பிரசாந்த் உட்பட 16 இளம் மருத்துவர்களுக்கு சிறந்த இளம் மருத்துவர்களுக்கான விருது வழங்கப்பட்டது. மாநாட்டில் 1500 க்கும் மேற்பட்ட மருத்துவ மாணாக்கர்களும், மருத்துவர்களும் இதர மருத்துவத்துறையினரும் பங்கேற்றனர்.

மாநாட்டில், பிற்போக்குச் சக்திகளிடமிருந்து "நவீன அறிவியல் மருத்துவம்" என்ற மனிதகுலத்தின் "அறிவியல் மணிமகுடத்தை" காத்திட வேண்டும்.

மிக்ஸோபதி (Mixopathy), ஒருங்கிணைந்த மருத்துவம் (Integrated medicine), காமன் ஃபவுண்டேஷன் கோர்ஸ் (Common Foundation Course), ஜோதிட மருத்துவம் (Astrological Medicine) ஆன்மீக மருத்துவம் (Spiritual Medicine), பாரம்பரிய மருத்துவம் (Traditional Medicine), வேதகால மருத்துவம் (Vedic Medicine) என்ற பெயரில் நவீன அறிவியல் மருத்துவத்தை நீர்த்துப் போகச் செய்வதை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

மருத்துவத்தில் போலி அறிவியலை, மூடநம்பிக்கைகளை, அறிவியலுக்கு எதிரான கருத்துக்களை திணிப்பதை ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

நெக்ஸ்ட் (NExT) தேர்வு மருத்துவ, பல் மருத்துவ மாணவர்களுக்கும் இளம் மருத்துவர்களுக்கும் பெரும் சுமையாக இருக்கும். மாநில அரசின் உரிமையை பறிக்கும். எனவே "நெக்ஸ்ட்" தேர்வு திணிப்பை ஒன்றிய அரசு நிரந்தரமாக கைவிட வேண்டும்.

"நீட்" தேர்விலிருந்து தமிழ்நாடு அரசின் கட்டுப்பாட்டில் உள்ள இளநிலை மருத்துவம், முதுநிலை மருத்துவம் மற்றும் உயர் சிறப்பு மருத்துவ இடங்களுக்கு நிரந்தர விலக்கு வழங்கிட வேண்டும்.

எம்.பி.பி.எஸ் மருத்துவ இடங்களை குறைப்பதையும், புதிய மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்படுவதை தடுப்பதையும் ஒன்றிய அரசு கைவிட வேண்டும்.

மாநில அரசுகளின் கட்டுப்பாட்டில் உள்ள மருத்துவ இடங்களுக்கும் ஒற்றைச் சாளர முறையில் மாணவர் சேர்க்கையை ஒன்றிய அரசே நடத்திட முயல்வதை கைவிட வேண்டும்.

எம்.பி.பி.எஸ் மாணவர் ஒவ்வொருவரும் முதலாம் ஆண்டு ஆரம்பத்தில் இருந்து படிப்புக் காலம் முடியும் வரை சில குடும்பங்களை தத்தெடுக்க வேண்டும் என்ற குடும்ப தத்தெடுப்பு திட்டம் (Family Adoption Programme) மாணாக்கர்களுக்கு பயனற்றது. பாதுகாப்பற்றது. மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் பல்வேறு புதிய பிரச்சினைகளை உருவாக்கும். எனவே இத்திட்டத்தை கைவிட வேண்டும்.

முதுநிலை மருத்துவ மாணவர்களுக்கான "மாவட்ட மருத்துவமனை கட்டாயப் பணி (District Residential Program) இளம் மருத்துவர்களின் வேலை வாய்ப்பை பறிக்கும் திட்டமாகும். இது, உழைப்புச் சுரண்டல் உட்பட பல்வேறு வகையான சுரண்டல்களுக்கும் வழிவகுக்கும். பாதுகாப்பற்ற, பயனற்ற இத்திட்டத்தை முழுமையாக ஒன்றிய அரசு ரத்து செய்திட வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# விடாமல் தடுப்பதற்கு நீட் நுழைவுத்தேர்வு

## தி ஸ்டாலின் குற்றச்சாட்டு




நெருக்கடியான நிலையில்தான் இந்த சமூகச் சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் தேவையும் அதிகரித்துள்ளது.

இந்திய ஒன்றியத்திலேயே சுகாதாரக் குறியீடுகளில் தமிழ்நாடுதான் முன்னிலையில் இருக்கிறது என்றால், அதற்கு முக்கியக் காரணம் இங்கே இருக்கக்கூடிய மருத்துவர்களாகிய நீங்கள்தான்.

இந்த முன்னேற்றம் இன்றைக்கு, நேற்றைக்கு வந்த முன்னேற்றம் அல்ல. இதற்கு விதை போடப்பட்டது 100 ஆண்டுகளுக்கு முன்பு.

அதற்கு மிக, மிக முக்கியமான காரணம், நீதிக்கட்சியைத் தோற்றுவித்த இருவர். டாக்டர் நடேசனார், டாக்டர் நாயர் ஆகிய இருவரும் மருத்துவர்கள். 1925ஆம் ஆண்டு அந்தக் காலகட்டம் வரை மருத்துவம் படிக்க டாக்டராக வேண்டுமென்றால் சமஸ்கிருதம் தெரிய வேண்டும் என்று இருந்தது.

அந்த விதியை முடிவுக்குக் கொண்டு வந்தவர், நீதிக்கட்சியின் பனகல் அரசர்தான். இன்னார்தான் மருத்துவம் படிக்க வேண்டும் என்று இருந்த அந்த விதியை, நம் முன்னோர்கள் தகர்த்து ஒரு நூற்றாண்டு நெருங்கும் தருணத்தில் இப்போது இருக்கின்றோம்.

1925ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலைபோல, மருத்துவக் கல்வியை உருக்குலைக்கத் துடிப்பவர்களை எதிர்த்து இன்றும் போராடிக்கொண்டிருக்கிறோம்.

ஒரு மாநிலத்தில் 10 இலட்சம் பேருக்கு 100 எம்.பி.பி.எஸ் இடங்கள் என்ற புதிய விதியை நேஷனல் மெடிக்கல் கவுன்சில் கொண்டு வந்துள்ளது. அதை விதி என்று சொல்வதை விட ஒன்றிய அரசினுடைய சதி என்று தான், நாம் சொல்ல வேண்டும். நம்முடைய முதலமைச்சர் அவர்களின் எதிர்ப்பால் அதை அமல்படுத்துவதை இப்போது தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளார்கள். அது எப்போது வந்தாலும், நம்முடைய தமிழ்நாடு அரசும் நம்முடைய முதலமைச்சர் அவர்களும் எதிர்ப்பார்கள்.

நீட் தேர்வில் நடைபெற்று வரும் குளறுபடிகள் பற்றி, என்னைவிட உங்களுக்கு அதிகம் தெரியும். தரமான மருத்துவர்களை உருவாக்குகிறோம் என்று, ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக் கனவைச் சிதைத்து கோச்சிங் சென்டர்களை பணம் குவிக்கும் இடமாக, நீட் தேர்வு மாற்றி உள்ளது. இதனால் தமிழ்நாட்டில் 22 மாணவ மாணவிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளார்கள்.

இப்பொழுது தமிழ்நாடு மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலும் இந்தத் தற்கொலைகள் அதிகமாகி இருக்கின்றன. இந்தக் கொடுமைகள் போதாது என்று நீட் தேர்வில் 0 சதவீதம் இருந்தால் கூட போதும் எனப் புதுப் புதுக் குளறுபடிகளும் உள்ளே வருகின்றன.

நுழைவுத்தேர்வு என்பதே யாரெல்லாம் நுழையக் கூடாது என்பதற்கான தேர்வுதான் என்பதில் நாம் தெளிவாக இருப்பதால்தான் தொடர்ந்து நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றோம்.

இந்த மாநாட்டின் மூலம் சங்கம் ஒன்றிய அரசை வலியுறுத்தும் தீர்மானங்களை நான் வாசித்தேன். மருத்துவத் திற்குள்ளும் பாசிஸ்ட்டுகள் அவர்களின் மதவாதத்தைத் திணித்து, நவீன அறிவியல் மருத்துவத்தை ஒழிக்க முயற்சிப்பதை எதிர்ப்பது, நீட் தேர்வைத் தொடர்ந்து அடுத்ததாக அவர்கள் திணிக்க நினைக்கும் நெக்ஸ்ட் தேர்வை எதிர்ப்பது, மருத்துவக் கல்வி, மருத்துவ சேவையில், மாநிலங்களின் உரிமைகளைப் பறிக்க முயல்வதை எதிர்ப்பது உள்ளிட்ட எட்டுத் தீர்மானங்கள் இங்கு நிறைவேற்றப்படுகின்றன. இவை மருத்துவர்களுக்கும், மருத்துவ மாணவர்களுக்கும் மட்டுமல்ல, ஒட்டுமொத்த பொது மக்களின் நலனுக்கும் மிக மிக அவசியமானது இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

◆ தொகுப்பு: வ.மணிமாறன்

---

# நாடாளுமன்றம் அனுமதிக்காமல் நடைமுறைக்குவந்த உலக மயம், தனியார் மயம், தாராள மயம்

◆ கே.சுப்பராயன் எம்.பி.

நவீன விஞ்ஞானப்பூர்வமான மருத்துவ முறைகளுக்கு எதிரான மூடத்தனமான நம்பிக்கைகளை நம்ப வைக்கும் முயற்சிகளுக்கு எதிராகப் போராட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினரும் ஏஐடியுசியின் அகில இந்திய துணைத்தலைவருமான கே.சுப்பராயன் கேட்டுக்கொண்டார். அவர் ஆற்றிய உரை வருமாறு:

உலகம் முழுவதும் இருக்கிற பன்னாட்டு நிறுவனங்கள் தங்களின் உற்பத்திப் பொருட்களை, உலகம் தழுவி தங்கு தடையின்றி கொண்டு செல்ல அனுமதி தருவதற்குத் தான் உலக மயம், தாராள மயம், தனியார் மயம்.

மக்களுக்கு கல்வி, மருத்துவம் கொடுக்க வேண்டிய அரசு, அந்தப் பொறுப்பை தனியாரிடம் கொடுத்து விட்டது. இதனால் தனியார் கல்லூரிகளை கட்டிக் கொண்டிருக்கின்றனர். அது மாணவர்கள் படிக்க வேண்டும் என்பதற்காக அல்ல. பணம் சம்பாதிப்பதற்காக.

தனியார் மயக் கொள்கை அரசிடம் எந்தப் பொறுப்பும் இருக்கக் கூடாது என்கிறது. சமூக தேவைகள் அனைத்தையும் நிறைவேற்றும் பொறுப்புகளை தனியாரிடமே விட்டு விட வேண்டும். சமூகம் முழுவதையும் கொள்ளையடிக்க அரசாங்கமே அனுமதிக்கும் இந்தத் தனியார் மயம் பெரும் தீங்கு விளைவிக்கிறது.

உலகமயம், தனியார் மயம், தாராள மயம் என்ற இந்த மூன்று கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம் எதுவும் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படவில்லை. நாடாளுமன்றத்தின் அனுமதியின்றி இந்த மூன்று கொள்கைகளையும் நடைமுறைக்கு கொண்டு வந்தது உலக வர்த்தக அமைப்பும், உலக வங்கியும் தான்.

இந்த உலக வர்த்தக அமைப்பும் உலக வங்கியும் சர்வதேச நிதி மூலதனத்தின் கருவிகள்.

நிதி மூலதனம் என்பது வளரும் நாடுகளின் அதிகாரங்களை தங்களுக்கு இசைவாக மாற்றி அமைத்துக் கொள்வது, புதைந்து கிடக்கும் இயற்கை வளங்களை சுரண்டுவதற்கான அனுமதிகளைப் பெறுவது என்பதுதான். இதற்கான கருவிகள்தான் உலக வர்த்தக அமைப்பும் உலக வங்கியும்.

தனியார் மயம் தான் கல்வியை செலவுமிக்கதாக மாற்றி விட்டது. கல்வி கொடுக்க வேண்டிய அரசு அந்தப் பொறுப்பில் இருந்து முற்றிலும் விலகி விட்டது. எனவே தான் மருத்துவர்களுக்கு மட்டுமல்ல, மருத்துவம் படிக்கும் மாணவர்களுக்கும் படிப்பது செலவு மிக்கதாக மாறியிருக்கிறது. இந்த கொள்கை நிலையில் மாற்றம் கொண்டு வர வேண்டிய தேவை உருவாகி இருக்கிறது. கொள்கை மாற்றம் வந்தால்தான் பரிபூரண விடுதலை கிடைக்கும். நிலைமைகளில் மாற்றம் ஏற்படும்.

இன்றைக்கு ஆளுகின்ற ஒன்றிய அரசு எது தேவையோ அதனை நிராகரித்து விட்டது. அரசியல் சாசனம் மீறப்படுகிறது. ஜனநாயக அரசியல் அமைப்பு குலைக்கப்பட்டுவிட்டது. இந்த நெருக்கடியின் காரணமாகத்தான் சகல நெருக்கடிகளும் ஏற்படுகின்றன.

மாநில அரசுகளின் உரிமைகள் பறிக்கப்படுவதுடன் ஒன்றியத்தில் அதிகாரங்கள் குவிக்கப்படுகின்றன. பல நூற்றாண்டு காலத்துக்கு முந்தைய முறைகளே சிறந்தது என்ற கருத்து திட்டமிட்டு விதைக்கப்படுகிறது.

வெட்டப்பட்ட தலை அந்தக் காலத்தில் ஒட்டப்பட்டது எப்படி? மனிதனுக்கு எப்படி யானையின் தலை வந்தது? அந்தக் காலத்தில் எப்படி சிகிச்சை அளிக்கப்பட்டது? போன்ற மூடக் கருத்துகளை விஞ்ஞானிகள் மாநாட்டிலேயே பொறுப்பற்ற பேச்சுகளை பொறுப்புள்ள பதவிகளில் இருந்து கொண்டு பேசுகின்றனர்.

இப்படி எல்லாம் பேசுவதற்கு எது வாய்ப்பு தந்தது? கடந்த காலத்தில் பொற்காலம் எதுவும் இல்லை. கடந்த காலத்தில் ஒருபோதும் நவீன சிகிச்சை முறைகள் இருந்ததில்லை. மனிதனுக்கு ஏற்படும் உடல் ரீதியான சிக்கல்களை தீர்ப்பது மருத்துவ அறிவியல் தானே தவிர கடந்த காலத்தில் இருந்த முறைகள் அல்ல. கடந்த காலத்தில் எல்லாம் இருந்தது என இட்டுக் கட்டுவதை அதிகாரத்தில் இருப்பவர்கள் நிறைவேற்றத் துடிக்கின்றனர். ஒரு போதும் அது வெல்லாது. அப்படி வெல்வதற்கான வாய்ப்பு இல்லை.

எனவே நவீன விஞ்ஞானபூர்வமான மருத்துவ முறைகளுக்கு எதிரான மூடத்தனமான நம்பிக்கைகளை நம்ப வைக்கும் முயற்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றையும் எதிர்த்து நாம் போராட வேண்டும் இவ்வாறு கே.சுப்பராயன் உரையாற்றினார்.

16 ஆம் பக்கத் தொடர்ச்சி

நாங்கள் துணை நிற்கிறோம்.

தமிழ்நாட்டில் உருவாக்கப்பட்டிருக்கும் மருத்துவக் கட்டமைப்புகளை சிதைக்கும் வகையில், முதலில் நீட் தேர்வு திணிக்கப்பட்டது. மாணவி அனிதா தொடங்கி மாணவர் ஜெகதீஸ்வரன் வரை பல பேரின் உயிரை நீட் என்கிற கொடுவாள் பறித்தது. நீட் தேர்வில் இருந்து விலக்கு பெறுவதற்கான சட்டப் போராட்டத்தை நாம் உறுதியோடு முன்னெடுத்திருக்கிறோம். நீட் தேர்வை ரத்து செய்ய முடியாது என்ற ஆணவத்தோடு யார் பேசினாலும், எந்தப் பதவியில் இருப்பவர்கள் சொன்னாலும், நீட் விலக்கு என்கிற நம் இலக்கு, மக்களின் பேராதரவுடன் நிறைவேறியே தீரும். அதற்காக தி.மு.கழகத்தின் இளைஞரணி, மாணவரணி, மருத்துவ அணி இணைந்து உங்களைப் போன்றவர்களின் ஆதரவோடு தொடங்கிய கையெழுத்து இயக்கம், இன்றைக்கு மக்கள் இயக்கமாக மாறியிருக்கிறது.

நாம் நீட்டை எதிர்க்கும் நேரத்தில், நெக்ஸ்ட் தேர்வு என்று அடுத்த ஆபத்து நுழைகிறது. அதையும் வீறு கொண்டுஎதிர்க்க வேண்டிய கட்டாயத்திற்கு நாம் தள்ளப்பட்டிருக்கிறோம்.

மாவட்டந்தோறும் மருத்துவக் கல்லூரிகள் என்பதை நிரூபித்துக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர். அதன் காரணமாக, தமிழ்நாட்டில் மருத்துவக் கட்டமைப்பு வலுப்பெற்றுள்ள நிலையில், எம்.பி.பி.எஸ். மருத்துவப் படிப்புக்கான இடங்களைக் குறைப்பதற்கும், புதிய மருத்துவக் கல்லூரிகளைத் திறப்பதற்கும் ஒன்றிய அரசு தடை விதிக்கும் போக்கையும் எதிர்த்தோம்.

அதுபோலவே, மாநில அரசின் கட்டுப்பாட்டில் இருக்கும் மருத்துவ இடங்களுக்கான ஒற்றைச் சாளர முறையிலான மாணவர் சேர்க்கையை ஒன்றிய அரசு தனதாக்கிக் கொள்ளும் எதேச்சாதிகாரப் போக்கை மேற்கொண்டிருக்கிறது. எல்லா வகையிலும் மாநில உரிமைகளையும், மருத்துவக் கட்டமைப்பையும் சிதைக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரான ஜனநாயக அறப்போர்க் களமாக சமூக சமத்துவ டாக்டர்கள் மாநாடு நடைபெறுகிறது.

இது உங்கள் போராட்டம் இல்லை, எங்கள் போராட்டம்! தமிழ்நாட்டின் போராட்டம்! மாநில உரிமைகளுக்கான போராட்டம்! அந்த உரிமைப் போராட்டத்தில் எப்போதும் துணைநிற்போம். நீட் தேர்வில் இருந்து முழுமையான விலக்கு, மருத்துவக் கல்வியில் மாநிலத்தின் உரிமை ஆகியவற்றோடு, கல்வியை மாநிலப் பட்டியலுக்குக் கொண்டு வருவதற்கான முயற்சியும் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். இந்த உரிமைப் போரில் நாம் நிச்சயம்வெல்வோம்.

ஆபரேஷன் தியேட்டரில் அறுவை சிகிச்சையை முடித்து, நோயாளியின் இதயத் துடிப்பு உள்ளிட்டவை சீராக இருக்கிறதா என்று ஐ.சி.யூ வார்டில் கண்காணித்து, அதற்குப் பிறகு சாதாரண வார்டுக்கு மாற்றி, பின்னர் டிஸ்சார்ஜ் செய்வதற்கு எவ்வாறு உங்களுக்கு நேரம் தேவைப்படுகிறதோ அதுபோல மருத்துவக் கட்டமைப்பையே நோயாளி ஆக்கியவர்களிடம் இருந்து மருத்துவத் துறையையும் நாட்டையும் மீட்டு ஆரோக்கியமாக்கு வதற்கு அதிகபட்சமாக இன்னும் 6 மாதம் தேவையாக இருக்கிறது. வெற்றிகரமான சிகிச்சையை நிச்சயமாக இந்திய மக்கள் அளிப்பார்கள் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார்.

# குலக்கல்வியை கொண்டுவரும் தேசிய கல்விக்கொள்கை

## எதிர்த்துப் போராட மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் அழைப்பு




வசதி உள்ளவர்கள் மட்டுமே மருத்துவராக வேண்டும் என்ற தீய நோக்கத்தோடு திணிக்கப்பட்டதுதான் நீட் தேர்வு என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் குற்றம்சாட்டினார். அவர் ஆற்றிய உரை வருமாறு:

தேசிய கல்விக் கொள்கையை திரும்பப் பெற வேண்டும். அதனை அனுமதிக்க மாட்டோம் என்ற தீர்மானம் இந்த மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ளது. தற்போது பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை தேர்வு உண்டு. ஆனால் யாரையும் ஃபெயில் போடக்கூடாது. பிஞ்சு வயதிலேயே தோல்வி எண்ணங்கள் வந்து விடக்கூடாது என்பதற்காக இந்த முறை பின்பற்றப்படுகிறது. ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள தேசிய கல்விக் கொள்கை 2020 ன் படி மூன்று வயதில் பிள்ளைகளை பள்ளிகளில் சேர்க்க வேண்டும். மூன்றாம் வகுப்பில் பொதுத்தேர்வு நடத்தப்படும். அதில் அவர்கள் தேர்ச்சி பெற வேண்டும். பிறகு ஐந்தாம் வகுப்பு அடுத்து எட்டாம் வகுப்பில் பொதுத்தேர்வு நடத்தப்படும். அதிலும் அவர்கள் தேர்ச்சி பெற வேண்டும். அடுத்து பத்தாம் வகுப்பில் பொதுத்தேர்வு எழுத வேண்டும். அதன் பிறகு கல்லூரிகளில் சேர்வதற்கு நுழைவுத் தேர்வு எழுத வேண்டும்.

இப்படித் தேர்வுகளை கொண்டு வருவதற்கான நோக்கம் என்ன? ஒன்றிய அரசின் நோக்கம் பள்ளிக்கூடத்துக்கு எல்லோரும் வரக் கூடாது என்பதுதான். இதனால்தான் தேசிய கல்விக் கொள்கையை வேண்டாம் என்கிறோம்.

ராஜாஜி முதலமைச்சராக இருந்த போது குலக்கல்வி முறையை கொண்டு வந்தார். அதற்கு எதிராக திராவிட இயக்கமும் கம்யூனிஸ்டுகளும் கடுமையாகப் போராடினர். அதனால் ராஜாஜி முதலமைச்சர் பதவியிலிருந்து விலக நேர்ந்தது.

ராஜாஜி அன்றைக்கு கொண்டு வந்த குலக்கல்வி முறையை, தற்போது தேசிய கல்விக் கொள்கை என்ற பெயரில் கொண்டு வருகின்றனர். அதனால்தான் இதை எதிர்க்கிறோம்.

அடுத்து நீட் நுழைவுத் தேர்வு எதிர்ப்பை மக்கள் இயக்கமாக மாற்ற வேண்டும். அதற்காக 50 லட்சம் கையெழுத்துகளை பெறும் இயக்கம் தம்பி உதயநிதி முயற்சியில் நடந்து கொண்டிருக்கிறது. இந்த நீட் எதிர்ப்பு இயக்கம் குறித்து பலர் எதிர்மறையாக பேசுகின்றனர்.

ஓ.பன்னீர்செல்வம் முதலமைச்சராக இருந்த போது இந்த நீட் தேர்வுப் பிரச்சனை விஸ்வரூபம் எடுத்தது. அன்றைக்கு அமைச்சர்கள் டெல்லிக்கு செல்வார்கள். பிரதமர், உள்துறை அமைச்சர் உட்பட பலரை சந்திப்பார்கள். பிறகு வெளியில் வந்து செய்தியாளர்களிடம், அவரை சந்தித்தோம். இவரை சந்தித்தோம். நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்குத் தருவதாகக் கூறினார்கள் என்று தெரிவிப்பார்கள்.

ஒன்றிய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், ஜல்லிக்கட்டு தடைக்கு எதிராக அவசரச் சட்டம் கொண்டு வந்தது போல் நீட் தேர்வுக்கு எதிராக அவசரச் சட்டம் கொண்டு வாருங்கள். நீட் தேர்வில் இருந்து விலக்குத் தருகிறோம் என்றார். அவர் இப்படிச் சொன்னதற்கு அடுத்த நாள், உச்ச நீதிமன்றத்தில் நீட் தொடர்பான வழக்கு விசாரணைக்கு வந்தது. ஒரு மாநிலத்திற்கு மட்டும் நீட் தேர்வில் இருந்து விலக்கு தர முடியாது என ஒன்றிய அரசு திட்டவட்டமாக தெரிவித்தது. உச்சநீதிமன்றம் அனுமதி மறுத்து விட்டது. அதன் பிறகு தான் அனிதா உள்ளிட்டோர் சாக நேர்ந்தது. அவர்கள் கொல்லப்பட்டார்கள் என்றே கூற வேண்டும்.

ஒன்றிய அரசு நினைத்தால் நீட் தேர்வில் இருந்து இன்று கூட விலக்கு தர முடியும். ஆனால் அவர்கள் விலக்கு தர மறுப்பதன் நோக்கம், சாதாரண குடும்பங்களை சேர்ந்தவர்கள் மருத்துவராகக் கூடாது. பட்டியல் இனத்தைச் சேர்ந்தவர்கள், பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள் மருத்துவராகக் கூடாது. கிராமப்புற மாணவர்கள் மருத்துவராகக் கூடாது. அரசு பள்ளி மாணவர்கள் மருத்துவராகக் கூடாது. வசதி உள்ளவர்கள் மட்டுமே மருத்துவராக வேண்டும் என்ற தீய நோக்கத்தோடு நீட் தேர்வு திணிக்கப்பட்டிருக்கிறது. எனவே நீட் தேர்வுக்கு எதிராக அனைவரும் ஒன்றுபட்டுப் போராட முன்வர வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் தெரிவித்தார்.

# ஐசிஎப் இரயில்பெட்டித் தொழிற்சாலை எதிர்காலம் கவலையளிப்பதாக உள்ளது

## இரயில்வே அமைச்சருக்கு பினாய் விஷ்வம் எம்பி கடிதம்

ஒருங்கிணைந்த இரயில்பெட்டி தொழிற்சாலை (ஐசிஃஎப்) எதிர்காலம் குறித்த கவலையை வெளியிட்டு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தேசியக் குழு செயலாளர் பினாய் விஸ்வம் எம்.பி. இரயில்வே துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

“தமிழ்நாட்டின் சென்னை பெரம்பூரில் அமைந்துள்ள இந்திய இரயில்வேயின் ஒருங்கிணைந்த இரயில்பெட்டி தயாரிப்புத் தொழிற்சாலையின் (ஐசிஃஎப்) எதிர்காலம் குறித்த விஷயத்தைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நான் இதனை எழுதுகிறேன். இந்தத் தொழிற்சாலை இந்திய இரயில்வே வரலாறு நெடுக, பெட்டிகளின் வடிவமைப்பு, தரம் மற்றும் குறைந்த செலவில் இரயில்பெட்டி (பொருள்) உற்பத்தி என தனது செயல்பாட்டின் மூலம் தனது வலிமையையும், ஆகச் சிறந்த திறமையையும் நிரூபித்துச் செயல்படுகிறது.



ஐசிஃஎப் ஆலையின் 68 ஆண்டு கால பெரும் மரபு, ஒன்றிய அரசின் முதன்மை திட்டங்களின் ஒன்றான வந்தே பாரத் வகையிலான இரயில்களிலும்கூட பிரதிபலிக்கிறது. பழுதற்ற செயல்பாட்டுச் சான்றுகள் இருந்தபோதினும், இந்தப் பொதுத் துறை நிறுவனத்தை முழுதாகச் சரிந்து வீழச் செய்வதில் முடியும் பிரச்சனைகளைச் சந்திக்கிறது.

பொதுத் துறை நிறுவனமாக இருப்பதால், பயணிகள் இரயில் கோச் வண்டிகள் மற்றும் அதன் தொடர்புடைய பாகங்களின் உற்பத்தி மட்டுமின்றி, வேலை வாய்ப்பை வழங்குவது என்ற இரண்டு கடமை பொறுப்புகளை நிறைவேற்ற முடிகிறது. எனினும், இந்திய இரயில்வே மற்றும் தனியார் நிறுவனமான டிட்டாஹார்க் ரயில் சிஸ்டம் லிட் (TRSL) இடையே கான்டிராக்ட் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது என்ற செய்தி, ஐசிஃஎப் தொழிலாளர்கள் மத்தியில் அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்தியுள்ளது.

வந்தே பாரத் தூங்கும் வசதி வண்டிகளைத் தயாரிப்பதில், அவுட்சோர்சிங்‘கை நாடுவது (உற்பத்தி பணிகளை வெளியிலிருந்து பணி ஒப்பந்தம் மூலம் செய்து முடிப்பது), ஒருங்கிணைந்த இரயில்பெட்டி தொழிற்சாலையைக் கடுமையாகப் பலவீனப்படுத்தும். தனியார் நிறுவனத்திற்கு, அதன் நடவடிக்கைகளை அவுட்சோர்ஸிங் வேலைவாய்ப்புகள் மூலம் செயல்படுத்த ஐசிஃஎப் வளாகத்தைப் பயன்படுத்துவதற்கான தலையசைப்பு ஒப்புதல் பொதுத்துறை நிறுவனத்தின் உற்பத்தித் திறனைச் சீர்குலைப்பதுடன், அதன் ஊழியர்களின் எதிர்காலத்தை முச்சந்தியில் கொண்டுவந்து நிறுத்திவிடும். ஐசிஃஎப் நிறுவனத்தின் பல பிரிவுகளில் நிரப்பப்பட வேண்டிய ஏராளமான காலிப் பணியிடங்கள் உள்ளன. அவுட் சோர்ஸிங் முறைக்குப் பதில், அந்தப் பணியிடங்களை உடனடியாக நிரப்ப வேண்டும்.

TRSL தனியார் கம்பெனியை ஒப்பிடும்போது, ஐசிஃஎப் ஆலை உற்பத்தியானது மிகவும் கட்டுப்படியாகும் செலவிலான (காஸ்ட் இஃபெக்டிவ்) உற்பத்தியாகும். பொதுத்துறைநிறுவனத்திற்கு மாறாகத் தனியார் நிறுவனத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டால், அது பொதுமக்கள் பணத்தை வீணடிப்பது மற்றும் வேலை வாய்ப்புகளை இழப்பதும் ஆகும்.

மேற்கண்டவற்றையும், ஆத்மநிர்பார் பாரத் (சுயசார்பு இந்தியா) திட்டத்தின் உண்மையான சாரத்தையும் மனதில் கொண்டு, தனியார் நிறுவனத்துடனான ஒப்பந்தத்தை உடனடியாக ரத்து செய்யவும், காலிப் பணியிடங்களை நிரப்பி உழைப்புச் சக்தியை மறுவலிமையாக்குவது உள்ளிட்ட ஐசிஃஎப் ஊழியர்கள் கவலைகளையும் அக்கறையையும் கவனத்தில் கொண்டு தீர்வு காண நடவடிக்கை எடுக்கவும் நான் உங்களை வற்புறுத்துகிறேன்.” என்று தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.



வ.மணிமாறன்

# இஸ்ரேல் போர்க்குற்றங்களுக்கு தண்டனை கொடுப்பது யார்?





**அக்டோபர் 7 ஆம் தேதி ஹமாஸ் நடத்திய தாக்குதலை காரணம் காட்டி, இஸ்ரேல் ராணுவம் பாலஸ்தீனம் மீதான இனப்படுகொலை போரை தீவிரப்படுத்தியது.**

53 நாட்களில் (நவம்பர் 28 வரை) 6,150 குழந்தைகள் உட்பட 15,083 பாலஸ்தீனர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 38,900 பேர் படுகாயம் அடைந்துள்ளனர். இந்த நூற்றாண்டில் நடந்த எந்தப் போரிலும் இல்லாத அளவுக்கு, அதிகமான விகிதத்தில் பாலஸ்தீனக் குழந்தைகள் குறிவைக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கத்தார் நாட்டின் முயற்சியில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், இஸ்ரேல் ஹமாஸ் இடையே நவம்பர் 24ஆம் தேதி முதல் நான்கு நாட்களுக்கு தற்காலிக போர் நிறுத்தம் செய்யப்பட்டது. இந்தப் போர் நிறுத்தம் மேலும் இரண்டு நாட்களுக்கு நீட்டிக்கப்பட்டது.

போர் நிறுத்த ஒப்பந்தத்தின்படி, ஹமாஸ் பிடித்து வைத்திருந்த பணயக் கைதிகளில் 51 பேரும், இஸ்ரேல் அடைத்து வைத்திருக்கும் பாலஸ்தீன கைதிகளில் 153 பேரும் நான்கு நாட்களில் விடுதலை செய்யப்பட்டனர்.

இஸ்ரேல் ஆக்கிரமித்திருக்கும் மேற்குக் கரையில் உள்ள ரமல்லா நகரில், பாலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட்டனர். அவர்களை அங்கிருந்த மக்கள் ஆரவாரத்துடன் வரவேற்றனர். விடுவிக்கப்பட்ட பாலஸ்தீனர்களை அழைத்துவந்த பேருந்தை சூழ்ந்துகொண்டு ஆரவாரம் செய்தும், கொடிகளை அசைத்தும் வரவேற்றனர்.

ஒப்பந்தத்தின்படி இஸ்ரேலிடம் ஹமாஸ் கொடுத்திருக்கும் பட்டியலில் இடம்பெற்றிருக்கும் பெரும்பாலானவர் பதின்பருவ (டீன் ஏஜ்) பாலஸ்தீன சிறார்கள்.

இஸ்ரேல் விடுதலை செய்த பாலஸ்தீன கைதிகளில் ஒருவரான சாரா அல்சுவைஸா என்ற பெண், “தனிமைச்சிறையில் எங்களை அடைத்து வைத்திருந்தனர். இருட்டு அறைகளில், நடுங்கும் குளிரில் அவதிப்பட்டோம். பெப்பர் ஸ்பிரே எனப்படும் மிளகு பொடியை கைதிகளின் மீது இஸ்ரேலிய அதிகாரிகள் அடிப்பார்கள். இப்படி ஏராளமான சித்திரவதைகள். பாலஸ்தீன கைதிகள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொள்ளவோ உதவவோ முடியாது. அவமானகரமான அனுபவம்” என்று வேதனையுடன் கூறுகிறார்.

இஸ்ரேலிய குடியிருப்பு மீது பெட்ரோல் குண்டுவீசமுற்பட்டதாகக்கைதுசெய்யப்பட்ட 14 வயது சிறுவன் அப்துல்ரகுமான் அல் ஸகல் விடுவிக்கப்பட்டவர்களில் ஒருவர்.



சிறுவன் அல் ஸகல், கடைக்கு ரொட்டி வாங்கச் சென்ற இஸ்ரேல் படையினரால் சுடப்பட்டு பெட்ரோல் குண்டு வீச முற்பட்டதாக கைது செய்யப்பட்டான். தலையிலும் உடலின் கீழ்பகுதியிலும் ஏற்பட்ட காயங்களுக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தான். அல் ஸகல் விடுவிக்கப்பட்டவுடன் காலில் கட்டப்பட்டிருந்த மின்னணு வளையம் அகற்றப்பட்டது.

பதின்பருவ வயதினரை கைது செய்வதுடன், சிறையில் அடைத்து சித்திரவதையும் செய்துவரும் இஸ்ரேலின் அரச பயங்கரவாதத்தை இவை வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றன.

இஸ்ரேலின் கார்பெட் குண்டு மழையால் வடக்கு காசாவின் 40 சதவீத வீடுகள் அழிக்கப்பட்டு, இடிபாடுகளாக காட்சியளிக்கின்றன. சுகாதாரம், உணவு விநியோகம், நீர் சுத்திகரிப்பு அமைப்புகள் சிதைந்துள்ளன. இவை சர்வதேச சட்டத்தின்படி தெளிவான போர்க் குற்றங்கள்.

### யார் நடவடிக்கை எடுப்பது?

இஸ்ரேல் அரசின் தாக்குதல் இனப்படுகொலை தன்மை கொண்டது. அமெரிக்கா அதிபர் பைடென், கனடா பிரதமர் ட்ரூடோ, பிரிட்டன் பிரதமர் சுனாக், பிரான்ஸ் அதிபர் மக்ரோன், ஜெர்மனி அதிபர் ஷால்ட்ஸ், இத்தாலி பிரதமர் மெலோனி ஆகியோர் இஸ்ரேலின் இனப்படுகொலை போருக்கு கூட்டாளிகளாக உள்ளனர். காசாவில் நடந்திருக்கும் போர்க் குற்றங்கள் இவர்களுக்கு தெரியும் என்பது மட்டுமல்ல, அவற்றை நியாயப்படுத்தி வரவேற்றுள்ளன. தற்காலிக போர் நிறுத்தத்தால், இஸ்ரேலிய போர் விமானங்களின் இரைச்சல், வீடுகளை, கட்டடங்களை நிர்மூலமாக்கும் குண்டுகளின் பெரும் சப்தங்கள், செத்து மடியும் பாலஸ்தீனர்களின் மரண ஓலங்கள் சற்று ஓய்ந்திருக்கின்றன. எங்கும் அமைதி. இந்த அமைதி பாலஸ்தீனர்களுக்கு எப்போது நிரந்தரமாகக் கிடைக்கும்?

தொடர்புக்கு: 9500001224

## கோலன் குன்றுகளில் இருந்து வெளியேறு!

### இஸ்ரேலுக்கு எதிராக ஐ.நா.வில் தீர்மானம்

இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்துள்ள பாலஸ்தீனத்தின் கோலன் குன்றுகளை விட்டு வெளியேற வேண்டும் என ஐ.நா. பொது அவையில் கொண்டுவரப்பட்ட தீர்மானம் 91 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேறியது.

ஐ.நா. பொது அவையில் வங்கதேசத்தின் ஆதரவுடன் எகிப்து நாடு நவம்பர் 28 ஆம் தேதி அன்று தீர்மானம் கொண்டு வந்தது. 1967ல் சிரியாவுடன் நடைபெற்ற ஆறு நாள் போரில் கோலன் குன்றுகளை இஸ்ரேல் கைப்பற்றி தற்போது வரை ஆக்கிரமிப்பில் வைத்துள்ளது. இந்த ஆக்கிரமிப்பில் இருந்து இஸ்ரேலை வெளியேற்ற வேண்டும். நியாயமான, விரிவான மற்றும் நீடித்த அமைதி கொண்டுவரப்பட வேண்டும் என்று தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை 91 நாடுகளுடன் சேர்ந்து இந்தியாவும் ஆதரித்து வாக்களித்துள்ளது. கோலன் குன்றுகளை இஸ்ரேல் தனது எல்லையுடன் இணைத்து அதிகாரத்தை திணித்து வருவதை இந்த தீர்மானம் நிராகரித்தது. ஜப்பான் மற்றும் ஐரோப்பிய நாடுகள் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகளான இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, இஸ்ரேல் மற்றும் சில பசிபிக் தீவு நாடுகள் தீர்மானத்திற்கு எதிராக வாக்களித்துள்ளன.



## நூல்கள் அறிமுக விழா

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் காஞ்சிபுரம் மாவட்டக் கிளையின் சார்பாக “நவம்பர் மாத இலக்கிய சந்திப்பு”மன்ற படைப்பாளிகளின் “நூல்கள் அறிமுக நிகழ்வாக” மறைமலை நகர் மக்கள் இல்லத்தில் நடைபெற்றது.

காஞ்சிபுரம் மாவட்டக் குழுவின் தலைவர் ஜீவா மணிக்குமார் தலைமையில் மாவட்டச் செயலாளர் கவிஞர் ராமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மறைந்த தகைசால் தமிழர் தோழர் என்.சங்கரையாவின் திருவுருவப்படத்தினை மாவட்டத் தலைவர் ஜீவாமணிக்குமார் திறந்து வைத்தார். மாவட்ட துணைத் தலைவர் தோழர் வீரமணி கவிதாஞ்சலி செலுத்தினார்.

கூடுவாஞ்சேரி கிளையினுடைய பொறுப்பாளர் கவிஞர் கல்லை ஜெயராமன் அவர்கள் எழுதிய “உங்களின் கனிவான கவனத்திற்கு” கவிதை நூலை வங்கி அரங்கத் தலைவர் கோ.கந்தசாமி அறிமுகப்படுத்தி உரையாற்றினார். கவிஞர் கல்லை ஜெயராமன் தனது உரையினை வழங்கினார்.

செங்கை கிளையின் தலைவர் கவிஞர் ஆ.கிருட்டிணனின் “மண் தொடும் விழிகள்” கவிதை நூலை மாவட்ட பொருளாளர் சு.சங்கரநாராயணன் அறிமுகப்படுத்தி பேசினார். கவிஞர் ஆ.கிருட்டிணன் ஏற்புரை வழங்கினார்.

பெருமன்ற சென்னை மாவட்டத் தலைவர் ஆ.பாஸ்கர் எழுதி அனுப்பிய ஹைக்கூ கவிதையை தேவா வாசித்து நன்றியுரையும் நல்கினார்.

## டிசம்பர் 4 டெல்லி பேரணி

**தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம், தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம், அகில இந்திய விவசாய தொழிலாளர் சங்கம், தீண்டாமை ஒழிப்பு முன்னணி** ஆகிய இயக்கங்கள் இணைந்து பட்டியலின மக்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி 2023 டிசம்பர் 4ஆம் தேதி புது தில்லியில் பேரணி நடத்தி முடிவில் ஜனாதிபதியை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்படுகிறது.

டிசம்பர் 19ஆம் தேதி சென்னை தியாகராய நகர் சர்.பிட்டி தியாகராயர் அரங்கத்தில் **தலித் உரிமைகளுக்கான உச்சி மாநாடு** காலை 10 மணிக்கு துவங்கி மாலை 6 மணி வரை நடைபெறும்.

தோழமையுடன்

| | |
|---|---|
| **அ.பாஸ்கர்** | **மு. வீரபாண்டியன்** |
| பொதுச் செயலாளர் | பொதுச் செயலாளர் |
| தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் | தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் |

# முன்னாள் ஆளுநர் எம்.பாத்திமா பீவி மறைவுக்கு சிபிஐ இரங்கல்

முன்னாள் ஆளுநர் எம்.பாத்திமா பீவி மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது.

தமிழ்நாடு அரசின் முன்னாள் ஆளுநர் (1997 2001) ஓய்வு பெற்ற நீதியரசர் எம்.பாத்திமா பீவி (96) 23.11.2023 அன்று காலமானார் என்ற துயரச் செய்தி கேட்டு வேதனையுற்றோம்.

கேரளம் மாநிலம் பத்தினம்திட்டா மாவட்டத்தில் உள்ள அன்னவீட்டில் தமிழ் சமூக மரபு கொண்ட ராவுத்தர் குடும்பத்தில் 1927 ஆம் ஆண்டில் பிறந்தவர்.

சட்டம் பயின்று, வழக்குரைஞர் பணியை மேற்கொண்டு தனது சட்ட அறிவை ஆழப்படுத்திக் கொண்டவர். நீதிபரிபாலன முறைகளை கற்றுத் தேர்ந்தவர்.

நாட்டின் உச்ச நீதிமன்றத்தில் நீதிபதியாக பொறுப்பேற்ற முதல் பெண்மணி என்ற பெருமை பெற்றவர். ஆசியாவில் குறிப்பிடத் தக்க பெண் நீதிபதியாக விளங்கியவர்.

நீதியரசர் பணியில் இருந்து ஓய்வு பெற்ற பிறகு அரசின் பல்வேறு உயர்நிலை அமைப்புகளில் தலைமை ஏற்று சிறப்பாக செயல்பட்டவர்.

1997 முதல் 2001 கால கட்டத்தில் தமிழ்நாட்டின் ஆளுநராக சிறப்பாக செயல்பட்டவர். 1998 ஆம் ஆண்டில் கோயமுத்தூர் தொடர் குண்டு வெடிப்பு சம்பவத்தின் போது அரசுடன் இணைந்து நின்று அமைதிப்படுத்தும் பணிக்கு தீவிரமாக உதவியவர். கூட்டாட்சி கோட்பாடுகளுக்கும், மாநில மக்கள் உரிமைகளுக்கும் முன்னுரிமை கொடுத்த பெருமைக்குரியவர்.

நாட்டின் ஜனநாயக வாழ்வு நெருக்கடிக்கும், நீதிபரிபாலன முறை ஆபத்துக்கும் ஆளாகியுள்ள நேரத்தில் அனுபவம் வாய்ந்த நீதியரசர், அரசியல் விற்பன்னர் எம்.பத்திமா பீவி மறைவு பேரிழப்பாகும்.

அன்னாரின் மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது. என்று தனது அறிக்கையில் இரா.முத்தரசன் கூறியுள்ளார்.

# தொழிற்சங்கத் தலைவர் எஸ்.எஸ். தியாகராஜன் 10ஆம் ஆண்டு நினைவு நாள்



இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் உறுப்பினரும், ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் தேசிய துணைத் தலைவருமான எஸ்.எஸ்.தியாகராஜன் அவர்களின் 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி மற்றும் நினைவு தினக் கூட்டம் திருச்செங்கோடு நகர கட்சி அலுவலகத்தில் ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன் தலைமையில் நடைபெற்றது.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் தோழர் க.அன்புமணி, ஏஐடியுசி மாவட்ட பொதுச் செயலாளர் பி.தனசேகரன், ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், திருச்செங்கோடு சிபிஐ நகர செயலாளர் எஸ்.சுகுமார், திருச்செங்கோடு சிபிஐ ஒன்றிய துணை செயலாளர் கே.முரளிகிருஷ்ணன், ஏஐடியுசி பொதுத் தொழிலாளர்கள் சங்கம் எம்.முனுசாமி, ஏஐடியுசி கட்டட சங்க மாவட்ட துணைச் செயலாளர் ஆர்.கோபிராஜ் ஆகியோர் உரையாற்றினர். சாணார்பாளையம் கிளைச் செயலாளர்கதிர்வேல் நன்றி கூறி கூட்டத்தை முடித்து வைத்தார்.

***திண்டுக்கல்:*** ஏஐடியுசி தொழிற்சங்கத்தின் தேசியத் துணைத் தலைவர் எஸ்.எஸ்.தியாகராஜன் அவர்களின் பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி திண்டுக்கல் மாவட்ட கட்சி அலுவலகத்தில் நடைபெற்றது.

## வினாடி - வினா விடைகள்

1. 1871 மார்ச் 18 – மே 28 (71 நாட்கள்)
2. 1949 அக்டோபர் 1
3. பொலிவியாவில், 1967 அக்டோபர் 9 அன்று ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
4. சீனா, பிரான்ஸ், ரஷ்யா, பிரிட்டன், அமெரிக்கா
5. தாரா செரியன் 1957ல் மேயர் ஆனார்
6. கி.பி. 1010

# பட்டியலின மக்களின் கோரிக்கை சாசனத்தில் கையெழுத்து பெறும் இயக்கம்




பட்டியலின மக்களின் கோரிக்க சாசனத்தில் கையெழுத்து பெறும் இயக்கம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

***கள்ளக்குறிச்சி:*** தமிழ்நாடு தீண்டாமை ஒழிப்பு முன்னணி மற்றும் ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் சார்பில் தலித் மக்களின் உரிமைகளுக்கான 12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் கள்ளக்குறிச்சியில் அம்பேத்கர் சிலை அருகில், தீஒமு மாவட்ட செயலாளர் வே.ஏழுமலை, தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாவட்ட செயலாளர் எம்.வெங்கடேசன் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

சிபிஎம் மாவட்ட செயலாளர் ஜெய்சங்கர், விசிக. மாவட்ட செயலாளர் இரா. மதியழகன், தீஒமு மாவட்ட தலைவர். வே.ராஜா, அஇவிதொச மாவட்ட செயலாளர் பி. சுப்பிரமணியன், தவிதொச மாவட்ட செயலாளர். கே.எஸ்.அப்பாவு, தபெதிக மாவட்ட செயலாளர் செ.பிரபு, அம்பேத்கர் மக்கள் இயக்க மாவட்ட செயலாளர் வே.பெரியசாமி உள்ளிட்டோர் கலந்துகொண்டு கையெழுத்திட்டு கருத்துரை வழங்கினார்கள்.

***திருவள்ளூர்:*** கடம்பத்தூர் ஒன்றியம் அதிகத்தூர் கிராமத்தில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பில், பட்டியலின மக்கள் கோரிக்கை சாசனத்தில் கையெழுத்துப் பெறும் இயக்கம் டி.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்ட செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், மாவட்ட பொருளாளர் வி.சரவணன், மாவட்ட துணை செயலாளர் எம்.பி.குமார், கருணாகரன், சஞ்சய் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

ஈக்காடு ஒன்றியத்தில் மாவட்ட குழு உறுப்பினர் துரை தலைமையில் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. இதில் மாவட்ட குழு உறுப்பினர் முனுசாமி, புஷ்பராஜ், சத்தியநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

***விருதுநகர்:*** சேத்தூரில் தமிழ்நாடு ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் சார்பில், பட்டியலின மக்களின் கோரிக்கை சாசனம் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது. வழக்கறிஞர் பகத்சிங் தலைமை வகித்தார். மாநிலத் துணைத் தலைவர். முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பி.லிங்கம் இயக்கத்தை தொடங்கி வைத்தார். மாவட்ட செயலாளர் எஸ்.பழனிக்குமார், தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜன், சிபிஐ ஒன்றிய செயலாளர் கணேசமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## கலை இலக்கிய அரங்கம்

### முற்போக்கு நூல்கள் வெளியீட்டு விழா

எழுத்தாளர் இரா. பாரதிநாதன் எழுதி, புரட்சி பாரதி பதிப்பகம் வெளியிடும் முற்போக்கு நூல்கள் வெளியீட்டு விழா ஆவடி ஒசிஎஃப் ஒர்க்கர்ஸ் யூனியன் பொன் விழா அரங்கில் நடைபெற்றது.



AIDEF பொதுச் செயலாளரும், WFTU துணை பொது செயலாளருமான சி. ஸ்ரீ குமார் விழாவுக்கு தலைமை தாங்கி, கம்யூனிசம் தோற்று விட்டதா? என்ற நூல் குறித்து பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆவடி செயலாளர் மயில் வாகனன் வரவேற்புரை ஆற்றினார்.

இடது தொழிற்சங்க மையம் தலைவர் ஏ.எஸ்.குமார் மக்கள் யுத்தம் என்ற நூல் குறித்தும், ஜனசக்தி பொது மேலாளர் இளசை கணேசன் கம்யூனிசம் ஓர் எளிய அறிமுகம் என்ற நூல் குறித்தும் எழுத்தாளர் ஜீவா மார்க்சிய அழகியல் என்ற நூல் குறித்தும், சமூக ஆர்வலர் விஜயக்குமார் மண்ணுக்கேற்ற மார்க்சியம், ஒரு திரிபு வாதம் என்ற நூல் குறித்தும், தமிழ் உணர்வாளர்கள் கூட்டமைப்பு செந்தில்குமரன் நக்சல்பாரி கதைகள் என்ற நூல் குறித்தும் பேசினர்.

நூலாசிரியர் இரா. பாரதிநாதன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கி ஏற்புரை நிகழ்த்தினார். பதிப்பக இயக்குனர் திவ்யா துரைராஜ் நன்றி கூறினார்.

### கலை இலக்கிய அமர்வு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம், திருப்பூர் வடக்கு மாநகரம், மாதாந்திர கலை இலக்கிய அமர்வு திருப்பூர் பி.கே.ஆர் இல்லத்தில் மதிப்புறு தலைவர் தோழர் பாரதி சுப்பராயன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில், த.க.இ.பெ. மாநிலத் துணைச்செயலாளர் த.சசிகலா, வடக்கு மாநகரச் செயலாளர் எஸ்.ஏ.காதர் கலந்துகொண்டு அமர்வை வழிநடத்தினர்.

கொண்டப்பள்ளி, கோடேஸ்வரம்மாவின் சுயசரிதை நூலான "ஆளற்ற பாலம்" நூலை த.சசிகலா அறிமுகம் செய்து வைத்துப் பேசினார். பவா செல்லத்துரையின் "சொல் புதிது" கதைகளை திருஞானசம்பந்தம் சொன்னார்.

"ஆசிரியரின் பங்கு" என்ற தலைப்பில் ஆசிரியர் பெ.இராமன், "அம்பேத்கர் ஏன் புத்தமதத்தைத் தழுவினார்" என்ற தலைப்பில் ஆசிரியர் க.இராமசுப்பிரமணியன் சிறந்த முறையில் பேசினார்கள்.

"நம்பிக்கையே வாழ்கை" என்ற தலைப்பில் ஆசிரியர் க.அய்யாவு நல்லதொரு எழுச்சிக் கவிதையை வாசித்தார். மேலும் து.சோ.பிரபாகர், தமிழ் அமுதன், எம்.பி. இராமகிருஷ்ணன், ஆ. அருணாசலம் ஆகியோர்கள், கவிதை வாசித்துச் சிறப்பித்தனர். நிகழ்ச்சியை தோழர் அ.பழனி ஆசிரியர் தொகுத்து வழங்கினார். ஆர்.தளபதி விஜய ராஜா நன்றி கூறினார்.

### இலக்கிய அமர்வு

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் காரைக்குடி கிளைக் கூட்டம் கரு ஞானாம்பாள் மகாலில் முதுமுனைவர் ரெ.சந்திரமோகன் முன்னிலை வகிக்க, தமிழ் ஆசிரியர் 'தூய தமிழ்ப் பற்றாளர்' ஆனந்தி பாலசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. மொழி வாழ்த்தினை முனைவர் சுப. காளிமுத்து, மன்ற வாழ்த்தினை முனைவர் முருகேசுவரி ஆகியோர் பாடினர்.

"கவிஞர் மருதகாசியின் பாடல்களில் பொதுவுடைமைக் கருத்துக்கள்" எனும் தலைப்பில் முனைவர் முருகேசுவரி உரையாற்றினார். மருதகாசியின் வாழ்க்கை குறிப்புகள் சிலவற்றை இரா.பூபதி எடுத்துரைத்தார். தினமலர் சிறுகதைப் போட்டியில் பரிசு வென்ற எழுத்தாளர் பெ.பாண்டியன் அவர்களைப் பாராட்டி கவிஞர் கார்மேக செல்வராசன் பேசி, பரிசு வென்ற "வசந்தத்தின் அறிகுறி" சிறுகதையையும் சிறக்க சித்தரித்தார்.

எழுத்தாளரைப் பாராட்டி முனைவர் முத்துராசன் நூல்கள் வழங்கினார். எழுத்தாளர் பாண்டியன் ஏற்புரையாற்றினார். ரெ.சந்திரமோகன், பொ.அமுதா, கவிஞர் வீர.கற்பகம் ஆகியோர் பாடல்களை பாடினர். ஆசிரியர் பா.இலட்சுமி "எமனும் ஏமாற்றும்" என்ற நகைச்சுவை கதையைக் கூறினார்.

"சிரிக்க சிந்திக்க" மன்றத்தின் நிறுவனர் ப.முத்துகிருஷ்ணன் கூட்ட மதிப்பீடு செய்திட, அஞ்சல் அலுவலர் ஆ.ரமேஷ் நன்றி கூறினார்.



# போக்குவரத்து தொழிலாளர்கள் டிச. 4, 5 பிரச்சார இயக்கம், 19 வேலை நிறுத்தம்

அரசு போக்குவரத்து கழகங்களில் செயல்படும் அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் அனைத்து ஓய்வூதிய சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் 2311 23 அன்று திருநெல்வேலி,மதுரை, சேலம் கோவை, திருச்சி, கும்பகோணம், விழுப்புரம் மற்றும் 241123 சென்னை பல்லவன் இல்லம் அரசு போக்குவரத்து கழக தலைமையகங்கள் முன்பு,தொடர் முழக்கப் போராட்டம் கீழ்க்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி நடைபெற்றது.

◆ வரவு செலவு பற்றாக்குறையை தமிழக அரசு பொறுப்பேற்று வழங்கிட வேண்டும்,

◆ ஓய்வு பெறும் நாள் அன்று ஓய்வூதிய பலன்கள் வழங்கிட வேண்டும், ஓய்வூதியர்களுக்கு 8 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அகவிலைப்படி உயர்வு வழங்கிட வேண்டும், ஊதிய உயர்வு ஒப்பந்தங்களின் பலனை ஓய்வுதியர்களுக்கும் வழங்கிட வேண்டும், ஏழாவது ஊதிய குழுவின் பரிந்துரை அடிப்படையில் குறைந்தபட்ச ஓய்வூதியம் மாற்றியமைத்திட வேண்டும்,

◆ 2003 ஏப்ரலுக்கு பின்பு பணியில் சேர்ந்தவர்களை நடைமுறையில் இருக்கும் ஓய்வூதிய திட்டத்தில் சேர்க்க வேண்டும்,

◆ 2023 செப்டம்பர் முதல் மூன்று ஆண்டுகளுக்கு அமல்படுத்தும் விதமாக பதினைந்தாவது ஊதிய ஒப்பந்தம் உடனடியாக பேசி முடிக்க வேண்டும்

◆ வாரிசு வேலை வழங்கப்பட வேண்டும்

◆ காலிப் பணியிடங்கள் பூர்த்தி செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கூட்டமைப்பு சார்பாக தமிழகம் முழுவதும் தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து அடுத்த கட்ட நடவடிக்கையாக சென்னை போக்குவரத்து ஏஐடியுசி அலுவலகத்தில் ஓய்வு பெற்ற அலுவலர் சங்க மாநில தலைவர் பாலசுப்பிரமணியன் முன்னாள் நிர்வாக இயக்குனர் தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி டிசம்பர் 4 மற்றும் 5 தேதிகளில் தமிழகம் முழுவதும் அனைத்து பணிமனைகளிலும், பணியில் உள்ள, ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் சங்கமம் நடைபெறும்.

டிசம்பர் 19ஆம் தேதி கோரிக்கைகளை வலியுறுத்தி வேலை நிறுத்த அறிவிப்பு வழங்கப்படும்.

# கல்வி வளாகங்களில் அதிகரிக்கும் மத ரீதியான பிரச்சனைகளை தடுத்திட வேண்டும்

**கோவை மாவட்ட ஏஐஎஸ்எஃப் வலியுறுத்தல்**

அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தின் மாநிலத் துணைத்தலைவர் பா.நி.சினேகா தலைமையிலான மாணவர்கள் கோவை மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்துள்ளனர். மனுவில், "பாஜக அரசின் கார்ப்பரேட் ஆதரவு மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, பொருளாதாரக் கொள்கைகளால் தொழிலாளர்கள், விவசாயிகள், பெண்கள், மாணவர்கள், இளைஞர்கள் உள்ளிட்ட அனைத்து பகுதி மக்களும் கடுமையாக பாதித்துள்ளனர்.

இதனால் பாஜகவின் மீது மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள எதிர்ப்பு குரலை மடைமாற்ற சங்பரிவார் அமைப்புகள் மதம், சாதி ரீதியான பிரச்சனைகளை உருவாக்குகின்றனர். பொது அமைதியை சீர்குலைக்கும் வகையில் மதவெறுப்பு பிரச்சாரங்கள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தமிழகத்தில் கல்வி வளாகங்களும் குறி வைக்கப்படுகின்றன.

எனவே, தமிழ்நாடு அரசு விழிப்போடு இருந்து கல்வி வளாகங்களில் மத ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் மது, கஞ்சா, ஹெராயின், போதை மாத்திரை உள்ளிட்ட போதை பொருட்கள் முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்து வருகிறது.

குறிப்பாக மாணவர்களை குறி வைத்து இந்த விற்பனை நடைபெறுகிறது.

உற்பத்தியையும் இறக்குமதியையும் கட்டுப்படுத்த வேண்டும்.

கல்வி வளாகங்களில் மதம், மூடநம்பிக்கை சார்ந்த நிகழ்ச்சிகளை தடை செய்ய வேண்டும், போதைப்பொருள் விற்பனையில் ஈடுபடும் சமூக விரோதிகளை பாரபட்சம் இன்றி கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்", என்றும் அவர்கள் கொடுத்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

# பட்டியலின இளைஞர்கள் மீது சிறுநீர் கழித்து கொலைவெறித் தாக்குதல்!

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டி பாளையம் பொலவக்காளிபாளையம் இந்திரா நகர் குடியிருப்பில் வசித்து வரும் நவீன் குமார் மற்றும் அவரது நண்பர் கிருபாகரன் ஆகிய இருவரும் இருசக்கர வாகனத்தில் வந்துகொண்டிருந்தனர்.

கண்ணுச்சாமி மற்றும் சசிகுமார் ஆகிய இருவரும் சாதி ஆதிக்க வெறியுடன் உங்களுக்கு எங்கள் பகுதியில் என்னடா வேலை, என அடித்து இருசக்கர வாகனத்தை பறித்துச் சென்றுவிட்டனர். எனவே, அவர்கள் இருவரும் வீட்டிற்கு செல்ல இயலாது அதே இடத்திலேயே படுத்து தூங்கி விட்டனர். காலை 6 மணிக்கு இரு சக்கர வாகனத்தை பறித்துச் சென்றவர்கள் அந்த இடத்திற்கு வந்து இன்னும் உங்கள் ஊருக்கு செல்ல வில்லையா எனக் கேட்டுள்ளனர்.

வண்டியை நீங்கள் பிடுங்கிக் கொண்டு சென்றதால் எங்களால் வீட்டிற்குச் செல்ல முடியவில்லை எனவே இருசக்கர வாகனத்தை கொடுங்கள் என கேட்டுள்ளனர். இருசக்கர வாகனத்தை எடுத்து வருவதாக கூறிச் சென்ற கண்ணுச் சாமி மற்றும் சசிகுமார் ஊருக்குள் இருந்து மேலும் 18 பேரை அழைத்து வந்து இருவரையும் இரும்பு கம்பிகளால் மாறி மாறி கடுமையாக தாக்கியுள்ளனர். தாக்கியதில் மயக்க நிலைக்குச் சென்றுள்ளனர். நாவறண்டு தண்ணீர் கேட்ட நிலையில், 'இந்தாடா சக்கிலிய நாயே' என்று வாயில் சிறுநீர் கழித்துள்ளனர்.

சாதி வெறியர்களின் கொலைவெறி தாக்குதலால் படுகாயம் அடைந்த நவீன் குமார் மற்றும் கிருபாகரன் இரு வரும் கோபிசெட்டிபாளையம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சிறுவலூர் காவல் நிலையத்தில் இச்சம்பவம் குறித்து வன்கொடுமைத் தடுப்புச் சட்டப்பிரிவின் கீழ் பொன்னுச் சாமி மற்றும் சசிகுமார் உள்ளிட்ட 20 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எப் ஐ ஆர் பதிவு செய்யப் பட்டு பல நாட்கள் ஆகியும் குற்றவாளிகள் இன்று வரை கைது செய்யப்படவில்லை.

பட்டியல் சமூக இளைஞர்கள் மீது கொலைவெறி தாக்குதல் நடத்திய குற்றவாளிகள் அனைவரையும் காவல்துறை உடனடியாக கைது செய்ய வேண்டும், பாதிக்கப்பட்ட இளைஞர்களுக்கு உயர் சிகிச்சை வழங்க வேண்டும்.

# பரமக்குடி எஸ்.ஆர்.ரமீலா அம்மையார் மறைவுக்கு இரங்கல்

பரமக்குடி எஸ்.ஆர்.ரமிலா அம்மையார் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

இராமநாதபுரம் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னோடியும், கைத்தறி நெசவாளர் சங்கத்தின் மாநில தலைவருமான எஸ்.பி.இராதா அவர்களின் வாழ்விணையர் எஸ்.ஆர்.ரமிலா (73) அம்மா மதுரை மருத்துவமனையில் காலமானார் என்ற துயரச் செய்தி அறிந்து வேதனை அடைந்தோம்.

பரமக்குடி, எமனேஸ்வரம் சுற்று வட்டாரப் பகுதிகளில் அடர்த்தியாக வாழ்ந்த நெசவாளர்களின் வாழ்வுரிமைக்காக தொழிற்சங்க அமைப்புகளையும், கூட்டுறவு சங்கங்களையும் உருவாக்குவதில் சிறப்பான பங்களிப்பு செலுத்தியவர் எஸ்.பி.இராதா, இவரது பொது வாழ்வுக்கு உறுதுணையாக இருந்தவர் ரமிலா அம்மையார். இவர்களுக்கு மூன்று மகள்களும், இரண்டு மகன்களும் உள்ளனர்.

ரமிலா அம்மா மறைவுக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. அவரை பிரிந்து வாடும் அவரது கணவர் எஸ்.பி.இராதா உள்ளிட்ட குடும்பத்தாருக்கு ஆறுதல் தெரிவித்துக் கொள்கிறது என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# ஜனசக்தி வளர்ச்சி நிதி



கரூர் மாவட்ட முன்னாள் செயலாளரும், கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினருமான எம்.ரத்தினம் – ஆர்.லட்சுமி ஆகியோரின் மகன்வழி பேரன் ஆர்.சாய்நிஷாந்த்–எம்.சூரிய பிரபா ஆகியோரின் திருமண வரவேற்பு கரூரில் நடைபெற்றது. கட்சியின் மாநில கட்டுப்பாடு குழு தலைவர் கே.சுப்பராயன் எம்.பி.,மாநில துணை செயலாளர் நா.பெரியசாமி, மாநிலக் குழு உறுப்பினர்கள் டி.ஏ.மாதேஷ்வரன்,திருப்பூர் எஸ்.ரவிச்சந்திரன், ஏஐஒய்எப் மாநில செயலாளர் க.பாரதி, திருப்பூர் மாமன்ற உறுப்பினர் எஸ்.செல்வராஜ், விவசாயிகள் சங்க மாநில துணைதலைவர் சி.எம்.துளசிமணி,கரூர் மாவட்ட செயலாளர் கே.என்.நாட்ராயன் உள்ளிட்டோர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினர். ஜனசக்தி வளர்ச்சி நிதியாக ருபாய் ஐயாயிரம் கே.சுப்பராயன் அவர்களிடம் ரத்தினம் வழங்கினார்.

# புதிய ஆட்டோக்களுக்கு உரிமம் வழங்க வழக்கு

மதுரை மாவட்டத்தில் கடந்த 2015முதல் புதிய ஆட்டோக்களுக்கு உரிமம் (பெர்மிட்) வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதனால் பழைய ஆட்டோக்களின் உரிமத்தை மோசடியாக பெற்று புதிய ஆட்டோக்களுக்கு கள்ளச் சந்தையில் விற்கின்றனர்.

பழைய ஆட்டோ உரிமத்தை வைத்துக்கொண்டு புதிய ஆட்டோக்களை ஓட்டுவதால் பல லட்சம் ரூபாய்கள் கைமாறுவது மட்டுமல்ல, அரசாங்கத்திற்கும் மிக பெரிய வருவாய் இழப்பு ஏற்படுகிறது. இவ்வாறு பழைய உரிமம் வைத்து ஓட்டும் ஆட்டோக்கள் ஏதேனும் விபத்துக்களில் சிக்கினால் இழப்பீட்டு தொகை பெற இயலாது. ஆட்டோவில் பயணம் செய்பவர்களின் நிலையும் கேள்வி குறியாகிவிடும்.

இத்தகைய தவறான போக்கினை சுட்டிக்காட்டி சம்பந்தப்பட்ட அரசு துறை உடனடியாக தலையிட்டு புதிய உரிமங்களை வழங்க உத்தரவிட வேண்டுமென, ஏஐடியூசியின் மதுரை மாவட்ட ஆட்டோ தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் சித்திக் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ஏற்கனவே இது சம்பந்தப்பட்ட தமிழக அரசின் மேல்முறையீட்டு வழக்குகள் நிலுவையில் உள்ளன, எனவே அந்த வழக்குகளுடன் இதனையும் சேர்த்து விசாரணைக்கு பட்டியலிட சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# அகழி வெட்டுவதற்கு எதிர்ப்பு

கோவை மாவட்டம் பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியத்திற்கு உட்பட்ட பாலமலையில் பழங்குடியின மக்களின் பட்டா நிலத்தில் அகழி வெட்டும் திட்டத்தின் கீழ் வனத்துறையினர் அகழி வெட்டியுள்ளார். தொடர்ந்து பழங்குடியினரின் எதிர்ப்பையும் மீறி பொக்லின் இயந்திரத்தை வைத்து குழிகளை தோண்டி வருகின்றனர். தகவல் அறிந்து கட்சியின் தேசிய குழு உறுப்பினர் எம்.ஆறுமுகம் மற்றும் மாவட்டச் செயலாளர் சி.சிவசாமி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றிய செயலாளர் ராமமூர்த்தி, செல்லமுத்து, மாவட்ட குழு உறுப்பினர் ஜெகநாதன், சிவகணேஷ் ஆகியோர் நேரடியாக சென்று பார்வையிட்டு மக்களுக்கு ஆறுதல் கூறி ஆதரவு தெரிவித்தனர்.

வனத்துறை அலுவலகம் சென்று வனத்துறை அதிகாரியை சந்தித்து பழங்குடியின மக்களின் கோரிக்கையை ஏற்று ஆவன செய்யும்படி வேண்டுகோள் விடுத்தனர்.

## இந்த வார தம்பிக்குறள்

**141. கருவி யளவே அளவு**

**கருவிஇல்லாது இல்லையாம் வெற்றி துருவியும்**
**தோன்றுதல் அஃதல்ல தில்.**

தொழில் கருவிகள் இல்லாமல் தொழிலில் வெற்றி அடைதல் இயலாது. துருவித், துருவி முயன்றாலும், உரிய தொழில் கருவிகள் தாம் வெற்றி உண்டாக்குகின்றன என அறிக.

**கருவி கருதி பிடிப்பான் ஒருவன்**
**விரும்பிய வேண்டி வரும்.**

தொழிலுக்குப் பயன்படுத்தும் கருவிகளை நன்கு தேர்ந்தெடுத்து அவற்றைத் தக்கபடி பயன்படுத்துபவன், தான் விரும்பும் செயல்களைச் செய்து முடிப்பான்.

# நூல் நயம்

## கம்யூனிச அழகியல்




கலை கலைக்காகவே என்கிற வறட்டுவாதிகளுக்கு மத்தியில், கலை மக்களுக்கானது என்பதை உரத்து சொன்னவர்கள் கம்யூனிஸ்டுகள். எனவே கம்யூனிச இலக்கியத்தில் உள்ள அழகியலை எடுத்து கூறுகிறார் பாரதிநாதன்.

ஒரு படைப்பை வர்க்க சார்பற்றது என்று சொல்வது ஏமாற்று வேலை. ஒரு செய்தியே வர்க சார்போடு இருக்கிற போது, ஒரு படைப்பு எவ்வாறு சார்பு இல்லாது இருக்க முடியும்? எனவே தான் இதை நன்றாக உணர்ந்துள்ள கம்யூனிஸ்டுகள் முதலாளித்துவ நச்சு இலக்கியங்களை ஒவ்வொரு நாளும் அம்பலப்படுத்தி வருகிறார்கள். அது எளிய மக்களின் மொழியில் இருப்பதால் கம்யூனிஸ்டுகள் அழகு உணர்ச்சி அற்றவர்கள் என்று பிற்போக்கு இலக்கியவாதிகள் இட்டுக்கட்டி கூறி வருகிறார்கள்.

சினிமா, நாடகம், கதைகள், கவிதை என்று பல்வேறு களங்களில் கம்யூனிஸ்டுகள் தனி முத்திரை பதித்திருக்கிறார்கள். ஆனால் இது போதுமான அளவில் இல்லை என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் இவர்கள் இல்லாத துறை இல்லை என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். இவற்றில் உழைக்கும் மக்களின் பிரச்சினைகளை அபிலாசைகளை உரத்து பேசியிருக்கிறார்கள். இதைத்தான் பிரச்சார இலக்கியம் என்று வர்க்க சார்போடு விமர்சனம் செய்கிறார்கள்.

“ஒரு நிகழ்வு கலைஞனின் மனதில் பிரதிபலித்து அவனது சிந்தனையில் அக கருத்தை தோற்றுவிக்கிறது. இந்த புறநிலை , அகநிலை இவற்றின் கலத்தலையே ரசவாதம் என்கிறோம். அதில் உருவாகும் பாத்திரப் படைப்புகளை படிவம் என்று கூறுகிறார்கள் இலக்கிய ஆய்வாளர்கள். இந்தப் படிமம் மூலமாகத்தான் படைப்பாளிகள் படைப்புக்களை வெளியிடுகிறான். இந்தப் புறநிலை, அகநிலை கலத்தல் ரசவாதம் என்பதும். அதிலிருந்து படிமங்கள் உருவாவதும் பாட்டாளிவர்க்க கலைக்கு மட்டும் பொருந்துவதில்லை. இது முதலாளித்துவ கலைக்கும் பொருந்தும்” என்று கூறுகிறார் நூலாசிரியர்.

கலையை மக்கள் விடுதலைக்கு பயன்படுத்துகிறவர்கள் கம்யூனிஸ்டுகள். அதன் அழகிகளை மிக நுட்பமாக கூறுகிறார் நூலாசிரியர். நூலை அனைவரும் வாங்கி படிக்கவும்

– இன்சுவை பாரதி

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : இரா. பாரதிநாதன் | |
| பக்கம் | : 120 | விலை: 140 |
| வெளியீடு | : புரட்சி பாரதி பதிப்பகம், மோரை, நாகூர் ஆண்டவர் நகர், ஆவடி, சென்னை – 55 | |

## மக்கள் யுத்தம்

நாட்டில் ஒவ்வொரு நாளும் கனிமக் கொள்ளைகள் நடைபெற்று வருகின்றன. அது ஆற்று மணலாக, மலைகளாக, இரும்பு தாதுக்கள் போன்ற கனிமங்களாக இருக்கலாம் அனைத்தையும் வரைமுறையின்றி முதலாளித்து லாபவெறிவாரி சுருட்டிக் கொண்டிருக்கிறது. இதை எதிர்த்து ஒவ்வொரு நாளும், ஏதோ ஒரு மூலையில் மக்கள் போராடிக் கொண்டிருக்கிறார்கள்.




தமிழகத்தின் சமவெளியில், நகரங்களுக்கு அருகில் நடக்கிற கனிமக் கொள்ளைகளையே தடுத்து நிறுத்த முடியாத சூழலில், அடர்ந்த வனங்களில் நடக்கிற கனிம கொள்ளைகளை எவ்வாறு தடுத்து நிறுத்த முடியும்? இதை தடுத்து நிறுத்த முயலும் பொது மக்களை நக்சல்வாதிகள், நகர்ப்புற நக்சல்கள், தீவிரவாதிகள், பயங்கரவாதிகள் என்கிற பெயரில் அரசு அடக்குமுறை கருவிகளைக் கொண்டு கடுமையாக நசுக்கி விடுகிறது முதலாளித்துவ அரசுகள்.

இது போன்ற சுரண்டல்களை, கனிமக் கொள்கைகளை எதிர்த்தவர்கள், இயற்கையை பாதுகாப்பதற்காக போராடுகிறார்கள். இப்படி பட்டவர்கள் மீது தான் அரசின் அடக்குமுறை கடுமையாகப் பாய்ந்து விடுகிறது.

எந்தவித சுயநலமும் இல்லாமல் மக்கள் நலனுக்காக போராடிய ஒரு மனிதனின் வாழ்க்கையை, இந்த முதலாளித்து அரசாங்கம் எவ்வாறு வேட்டையாடி விடுகின்றன என்பதை இரா. பாரதி நாதன் எழுதிய மக்கள் யுத்தம் என்கின்ற இந்த நாவல் விரிவாக பேசுகிறது. காட்டை, மணலை, நதியை கனிமங்களை, இயற்கையை நேசிக்கவும், பாதுகாக்கவும் நினைக்கும் ஒவ்வொருவரும் படிக்க வேண்டிய நாவல் இது. அனைவரும் வாங்கி படிக்கவும்.

–சமரன்

| | | |
|---|---|---|
| நூலாசிரியர் | : இரா. பாரதிநாதன் | |
| பக்கம் | : 336 | விலை: 420 |
| வெளியீடு | : புரட்சி பாரதி பதிப்பகம், மோரை, நாகூர் ஆண்டவர் நகர், ஆவடி, சென்னை – 55 | |


# மாமேதை பிரெடரிக் எங்கல்ஸ்



ஆர்.பாலச்சந்திரன்

மாமேதை பிரெடரிக் எங்கெல்ஸ் ஒரு தத்துவஞானி. காரல் மார்க்ஸின் இணைபிரியா தோழருமாவார். இவ்விருவரின் கூட்டு சிந்தனையில் உருவானதே கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை.

ஜெர்மனியின் பார்மென் என்ற ஊரில்1820ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் நாள் பிரெடெரிக் எங்கல்ஸ் பிறந்தார். அவரின் தந்தை ஒரு நெசவாலை முதலாளி.. அச்சமயத்தில் தொழிலாளர்கள் மிகக் குறைந்த ஊதியமே பெற்றுவந்தனர். குழந்தைப் பருவத்தில் தொழிலாளர்களின் வாழ்க்கையில் இவர் கண்ட ஏழ்மைக் காட்சிகள் அவரை மிகவும் வருத்தின. எங்கெல்ஸ் தன் இறுதி வகுப்பு முடிக்குமுன்னேயே தனது தந்தையால் வியாபாரத்தில் ஈடுபடுத்தப்பட்டார். தனது ஓய்வு நேரங்களில் பெர்லின் பல்கலைக் கழகத்திற்கு சென்று வரலானார்.



இங்கிலாந்தில் உள்ள தனது தந்தையின். நெசவாலையில் வர்த்தக அனுபவம் பெறும்படி பிரிட்டனுக்கு அனுப்பி வைக்கப்பட்டார். 1942ஆம் ஆண்டுநவம்பர் மாதம் லண்டன் வந்து சேர்ந்தார்.

எங்கெல்ஸ் இங்கிலாந்தில் வசித்தபோதுதான் மக்களுக்கு உரிமை கோரும் சார்டிச இயக்கம் எழுச்சிபெற்று வந்தது. அவ்வியக்கத் தலைவர்களுடன் தொடர்புகள் ஏற்படுத்திக் கொண்டார்.

எங்கெல்ஸ் சோசலிச இயக்கத்தையும். தொழிலாளர் இயக்கத்தையும் ஒன்றிணைப்பது, கற்பனா சோசலிஸமாக இருந்த ஒன்றை விஞ் ஞான சோசலிஸமாக மாற்றுவதும் அவசியம் எனக் கருதினார். பெரிய வல்லமை மிக்க தொழிலாளி வர்க்கத்தின் கோட்பாடாக இதை மாற்றுவது என்ற வரலாற்றுப்பணி காரல் மார்க்ஸ்,பிரடெரிக் ஏங்கல்சின் தோள்களில் வந்தது.

1844ஆம் ஆண்டு இறுதியில் மான்செஸ்டர் நகரத்தை விட்டு தாயகம் திரும்பினார் எங்கெல்ஸ். வழியில் பாரிசில் இறங்கி அப்போது அங்கு வசித்துவந்த மார்க்ஸைச் சந்தித்தார். இருவரும் பாரிஸில் ஒன்றாகக் கழித்தது பத்துநாட்கள்தாம். மார்க்ஸும் எங்கெல்சும் பாரிஸில் ஒருவரை ஒருவர் சந்தித்த காலத்திலேயே அவர்கள் இருவரும் கம்யூனிஸ்ட்களாக மாறியிருந்தனர்.

கருத்துமுதல்வாதத்திலிருந்து பொருள்முதல்வாதத்திற்கு வழி அமைத்துக்கொண்டு வந்து சேர்ந்திருந்த அவர்கள்,தமது தத்துவஞானக் கண்ணோட்டத்தை திவிரமாக மறுபரிசீலனை செய்யமுடிந்தது. அப்போது சோஸலிசக் கருத்துகள் கொண்ட பல சங்கங்கள் இங்கிலாந்திலும் பல ஐரோப்பிய நாடுகளிலும் இருந்தன. இவைகள் இணைந்து நேர்மையாளர்கள் சங்கம் என்ற ஒரு அமைப்பை ஏற்படுத்தின. அச்சங்க நிர்வாகிகள் மார்க்சிடமும் எங்கெல்சிடமும் அச்சங்க உறுப்பினர் ஆகும்படி கேட்டுக்கொண்டனர்.

1847 ஜூன் மாதத்தில் அச்சங்க மாநாடு லண்டனில் நடைபெற்றது. அந்தமாநாட்டில் நேர்மையாளர்களின் சங்கம் கம்யூனிஸ்ட்கள் சங்கம் என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. 1848 பிப்ரவரியில்புகழ்பெற்ற ‘கம்யூனிஸ்டுக் கட்சியின் அறிக்கை லண்டனில் வெளியானது.. கம்யூனிஸ்ட் கட்சியறிக்கை வெளிவந்த நேரத்தில் ஐரோப்பாவெங்கும் புரட்சிகள் கிளர்ந்தெழுந்தன.

பிரான்சில் புரட்சி நெருங்கிக் கொண்டிருந்தவேளையில் தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிப்பணி புரிந்தமைக்காக எங்கெல்ஸ் பாரீசில் இருந்து வெளியேற்றப்பட்டார். மார்க்ஸை வெளியேற்றியது பெல்ஜிய அரசு.பின்னர்எங்கெல்ஸும் வெளியேறி பாரிஸ் சென்றார். ஆளும் அரசுகள் இவர்களுக்கு கடுமையான தொந்தரவுகள் செய்தன. மார்க்ஸ் பிரிட்டீஸ் மியூசியத்தில் கடுமையான ஆராய்ச்சிப் பணி யினை மேற்கொண்டார். மூலதனம் என்ற நூலை எழுதிவந்த மார்க்ஸின் பணிகளுக்கு உதவி செய்வதன்மூலம் பாட்டாளிவர்க்கப் புரட்சியின் வெற்றிக்காக சேவை செய்துவந்தார்.

மார்க்ஸும், எங்கெல்சும். வேறு வேறு நகரங்களில் இருபதாண்டுகளுக்கு மேலாக வாழுமாறு நிர்பந்திக்கப் பட்டபோதும் அவர்களிடையே நிலவிய நட்பு மேலும் மேலும் நெருங்கி வலுப்பெற்றது.

1883 மார்ச்14ஆம் நாள் மார்க்ஸ் மறைந்தார். மார்ச் 17ல்,லண்டனில் உள்ள ஹைகேட் இடுகாட்டில் மார்க்சின் சவ அடக்கம் நடந்தது. கல்லறை அருகே எங்கெல்ஸ் உணர்ச்சிததும்ப உரை நிகழ்த்தினார். மார்க்ஸிற்குப்பின்னர் 12ஆண்டுக்காலம் உயிர்வாழ்ந்த எங்கெல்ஸ் இந்தக் காலத்தில் ஏராளமான கட்டுரைகளும், பல தத்துவ முக்கியத்துவம் வாய்ந்தவையான முழு நூல்களும் எழுதி முடித்திருக்கிறார்.

“குடும்பம் ,தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்”, “லூத்விக் ஃபாயர்பாகும் மூலச்சிறப்புள்ள ஜெர்மன் தத்துவ ஞானத்தின் முடிவும்”,இயற்கையின் இயக்கவியல், டூரிங்குக்கு மறுப்பு, போன்ற நூல்கள் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.

1895 ஆகஸ்டு 5ஆம் நாள் இரவு 11மணியளவில் இயற்கை எய்தினார் பிரெடெரிக் எங்கெல்ஸ்.. மார்க்ஸ் எங்கெல்ஸ் என்ற மாபெரும் மேதைகள் உலக மக்களின் விடுதலைக்காக தன் வாழ்நாள் முழுவதும் அர்ப்பணித்தனர். எங்கெல்ஸின் பிறந்தநாள் நவம்பர் 28. அவருக்கு நமது செவ்வணக்கங்கள் உரித்தாகுக!

# ஏமன் நாட்டிலுள்ள இந்திய செவிலியரின் உயிரைப் பாதுகாக்க வலியுறுத்தல்

பிரதமர் நரேந்திர மோடிக்கு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசியச் செயலாளர் பினாய் விஸ்வம் எம்பி எழுதிய கடிதம் வருமாறு:

“நமது குடிமக்களில் ஒருவர் உயிர் சம்பந்தமான மிக அவசரப் பிரச்சனையை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர நான் இதனை எழுதுகிறேன். கேரளாவிலிருந்து சென்ற செவிலியர் நிமிஷா பிரியா, தற்போது ஏமன் நாட்டில் மரண தண்டனை ஆபத்தை எதிர்நோக்கி உள்ளார். ஏமன் குடிமகன் ஒருவரின் துரதிருஷ்ட மரண நிகழ்வின் தொடர்பாக நிமிஷா பிரியா ஏமன் நீதிமன்றத்தால் மரண தண்டனை விதிக்கப்பட்டார். தண்டனைக்கு எதிரான அவரது மேல் முறையீட்டை ஏமன் உச்சநீதிமன்றம் நவம்பர் 13ல் தள்ளுபடி செய்தநிலையில், அவரது உயிர்காப்பாற்றப்படும் வாய்ப்புகள் மிகக் குறைந்து விட்டன. வித்தியாசமான சட்டங்கள் மற்றும் நீதிமன்ற நடைமுறை வழக்கங்கள்கீழ் இயங்கும் ஏமன் நாட்டின் சட்ட முறைமை காரணமாக, நிலைமை மேலும் சிக்கலாகி விட்டது.

நிமிஷா பிரியாவின் குடும்பத்தினர், தொடர்புடைய குடிமக்கள் மற்றும் அமைப்புகள் ஆதரவுடன் பிரியா விடுதலைக்கான சாத்தியமான வாய்ப்புகளைத் தேடும்படிசோர்வின்றி இந்திய அரசிடம் கோருகின்றனர். ஏமனின் சட்ட நிகழ்முறை சிக்கலானது என்பதால், மரண தண்டனை எந்நேரமும் நிறைவேற்றப்படலாம் என்ற நிலையில், காலம் மிக முக்கியமானது. ஏமன் நாட்டில் அடுத்த உயர் மேல்முறையீட்டு அமைப்பின் முன் மரண தண்டனையை எதிர்த்து மேல்முறையீடு செய்யத் தொடங்கிய நடவடிக்கை உட்பட ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளையும், ஏமன் நாட்டில் செயல்படும் தூதரகத்திடமிருந்து ஆதரவுக்கான உறுதியளித்ததையும் நான் பாராட்டுகிறேன். எனினும், நிலைமையின் ஆழமான கடுமை மற்றும் வரையறுக்கப்பட்ட கால அவகாசத்தால், நம்முடனான குடிமகளின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான கூடுதல் நடவடிக்கைகளைப் பரிசீலிக்கும்படி நான் தங்களை வற்புறுத்துகிறேன்.

இந்நிலையில், ஏமன் அரசுடன் உச்ச மட்டத்தில் பொது மன்னிப்புக் கருணைக்கான சாத்தியமான வாய்ப்புகளைத்தேடிப்பயன்படுத்தத்தங்களின் அவசரத் தலையீட்டை நான் வற்புறுத்திக் கோருகிறேன். மேலும், டெல்லி உயர்நீதி மன்றம் வழிகாட்டியவாறு, நிமிஷா பிரியாவின் தாய் பேச்சுவார்த்தைக்காக ஏமன் பயணம் செய்வதற்கு வேண்டிய அனுமதி மனு தொடர்பான முடிவெடுப்பதை விரைவுபடுத்தவும் நான் தங்களிடம் வேண்டுகிறேன்.

நமது சக குடிமகளின் உயிர் ஊசலாடும்போது, வெளிநாட்டில் உள்ள இந்தியக் குடிமக்களின் நலன் மற்றும் உயிரைப் பாதுகாத்திட அனைத்து முயற்சிகளையும் முயன்று செய்வதே மக்களின் பிரதி நிதிகளாகிய நமது கடமை”. என்று தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

## 27 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி

# தொழிலாளர்கள்-விவசாயிகள் பேரெழுச்சி

### மத்திய தொழிற்சங்கங்கள்-ஐக்கிய விவசாயிகள் முன்னணி பங்கேற்பு



நெல்லை

**நெல்லை**

28/11/2023 காலை நெல்லை வண்ணார்பேட்டை ரவுண்டானாவில் ஒன்றிய அரசை கண்டித்து அனைத்து தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாய சங்கங்கள் இணைந்து

* விண்ணை முட்டும் விலைவாசி உயர்வை கட்டுப்படுத்து

* தொழிலாளர்களின் உரிமைகளை பறிக்கும் 4 சட்ட தொகுப்பை ரத்து செய்

* வேலை இன்றி வாழும் கோடிக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை உருவாக்கிடு

* இந்திய நாட்டின் சொத்துக்களான பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்காதே

உட்பட 27 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பெருந்திரள் அமர்வு ஆர்ப்பாட்டம் தொமுச தர்மன் தலைமையில் நடைபெற்றது. இதில் தொமுச மஹாவிஷ்ணு, ஏஐடியுசி சார்பில் மாவட்ட பொதுச் செயலாளர் ஆர். சடையப்பன்,மாவட்ட துணை தலைவர் ஆர். ரெங்கன், வி.கே. புரம் முருகன், பாலு, அணைவீரக்கண்ணு, பத்தமடை சேக், சிவகாமி, சுந்தரம், சிபிஐ நெல்லை மாவட்ட துணைச் செயலாளர் நண்பா. முத்துகிருஷ்ணன், கே.எஸ்.பாலு, பி.பரமசிவன், ஏ.முத்துகிருஷ்ணன், சி ஐ டி யு முருகன், மோகன், ஐஎன்டியூசி உமாபதி சிவன், ஏ ஐ சி சி டி யு கணேசன், எச் எம் எஸ் சுப்பிரமணியன், டிடிஎஸ் எஃப் சந்தானம் உட்பட திரளான தோழர்கள் கலந்து கொண்டு முழக்கங்கள் எழுப்பினர்.

**கோவை**

28.11.2023 மாலை 5.00 மணிக்கு கோவை மத்திய தந்தி அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

எச்.எம்.எஸ். தொழிற்சங்க தலைவர் டி.எஸ்.ராஜாமணி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் விலைவாசி வியர்வை கட்டுப்படுத்த வேண்டும் உள்ளிட்ட 27 அம்சக் கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

இந்த ஆர்ப்பாட்டத்தில் ஏ.ஐ.டி.யூ.சி. தொழிற்சங்கத்தின் மாநில துணைத்தலைவர் எம்.ஆறுமுகம், மாவட்ட பொதுச் செயலாளர் சி.தங்கவேல், மில் தொழிலாளர் சங்க செயலாளர் சி.சிவசாமி, எச்.எம்.எஸ். ஜி.மனோகரன், எல்.பி.எஃப். பா.மணி, ஆனந்த், ஐ.என்.டி.யூ.சி. பாசமலர், சண்முகம், துளசிதாஸ், புவனேஸ்வரி, சி.ஐ.டி.யூ. எஸ்.கிருஷ்ணமூர்த்தி, கே.மனோகரன், எம்.எல்.எப்.சரவணகுமார், ஏ.ஐ.சி.சி.டி.யூ. பாலசுப்பிரமணியம், வெங்கடாசலம், ஷாஜகான், எல்.டி.யூ.சி. மணிகண்டன், விவசாயிகள் சங்கம் சு.பழனிசாமி, வி.ஆர். பழனிசாமி மற்றும் எல்.செல்வம், கோட்டை நாராயணன், ஜே.கலா, கந்தவேல், சையது இப்ராஹிம், என்.சந்திரன், கே.ஆர். தங்கராஜ் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**திருச்செங்கோடு**

திருச்செங்கோடு அண்ணா சிலை முன்பு மாலை 5.00 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஏஐடியுசி மாவட்ட தலைவர் எஸ்.ஜெயராமன், சிஐடியு மாவட்ட தலைவர் எம்.அசோகன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

ஏஐடியுசி மாநிலச் செயலாளர் எஸ்.சின்னச்சாமி, சிஐடியு மாநிலத் துணைத் தலைவர் ஆர்.சிங்காரவேல், விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் கே.அன்புமணி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் எஸ்.ராமகிருஷ்ணன், சிஐடியு மாவட்ட செயலாளர் என்.வேலுச்சாமி, எச்.எம்.எஸ்.மாவட்ட தலைவர் கி.கலைவாணன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்.

**அரியலூர்**

மாவட்டத் தலைநகர் அரியலூர் அண்ணா சிலை அருகில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் தொழிற்சங்க கூட்டமைப்பு சார்பாக ஏ.ஐ.டி.யூ.சி மாவட்டப் பொதுச் செயலாளர் த. தண்டபாணி, தொமுச மாவட்ட கவுன்சில் செயலாளர் ரெ.மகேந்திரன், சிஐடியு மாவட்ட செயலாளர் பி. துரைசாமி, ஐ.என்.டி.யூ.சி. மாவட்ட தலைவர் தர்ம. விஜயகுமார் ஆகியோர் தலைமையேற்று உரையாற்றினார். ஆர்ப்பாட்டத்தில் ஏ.ஐ.டி.யூ.சி ரெ.நல்லுசாமி, செ. மாரியப்பன், வால்பாறை மாணிக்கம், அமிர்தவள்ளி,வெங்கடேசன், உஷாராணி, ராணி, ரா.தனலெட்சுமி, திருமானூர் ஜி.ஆறுமுகம், மு. கனகராஜ், டி. ஜீவா, சின்னத்துரை, அரியலூர் நகரம் மா. நல்லம்மாள், பெ.பெரியசாமி, கயர்லாபாத் டி.ராயதுரை, து.ராயதுரை, பார்த்திபன், ரா. பானுமதி, தொமுச பி.வி.அன்பழகன், கே.சின்னையன், வி.மதியழகன், கே.கனகராஜ், ஆர்.சங்கர்(டாஸ்மாக்) சி.ஐ.டி.யூ. ஆர்.சிற்றம்பலம், க. கிருஷ்ணன், சந்தானம் எச்.எம்.எஸ். எஸ். திருவள்ளுவர், ஆர்.நாகராஜன், ஐ.என்.டி.யூ.சி. ஏ. சின்னசாமி, ஏ.கலைவாணன், என். செந்தில்முருகன், எஸ். தமிழ்செல்வன் உட்பட 200க்கும் மேற்பட்டோர் திரளாக கலந்து கொண்டனர்.



கோவை

தோழர். K.T.K. தங்கமணி இல்லம்
தோழியர். வள்ளியம்மாள் அரங்கம்







திறப்பு விழா அழைப்பிதழ்

நாள் : 03.12.2023 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : காலை 10.30 மணி
இடம் : 63, வடக்குராஜா தெரு, தூத்துக்குடி

தலைமை
தோழர் P. சித்திரவேல் அவர்கள்
(செயலாளர், தூத்துக்குடி மாவட்ட AITUC, பஞ்சாலை தொழிலாளர் சங்கம் தூத்துக்குடி கிளை)

ஏ.ஐ.டி.யு.சி.கொடி ஏற்றி வைப்பவர்
தோழர். L. ஆரோக்கியசாமி அவர்கள்
(மூத்த தோழர், பஞ்சாலை தொழிலாளர் சங்கம்)

வரவேற்புரை
தோழர். S.R. ஞானசேகர் அவர்கள்
(மாநிலக்குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

K.T.K. தங்கமணி இல்ல திறப்பாளர்
தோழர். கே. சுப்பராயன் அவர்கள்
(திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர்/ தலைவர், மாநில கட்டுப்பாட்டுக் குழு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

செங்கொடி ஏற்றி வைப்பவர்
தோழர். M. அந்தோணி சௌந்தரராஜன் அவர்கள்
(மாவட்டக்குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)

வள்ளியம்மாள் அரங்க திறப்பாளர்
தோழர். T.M. மூர்த்தி அவர்கள்
(தேசிய செயலாளர் AITUC)

கோரல் மில் போராட்ட அனுபவங்கள் சிறு நூல் வெளியிடுபவர்
தோழர். M. ராதாகிருஷ்ணன் அவர்கள்,
(மாநில பொதுச் செயலாளர், AITUC தமிழ் மாநிலக்குழு)

கே.டி.கே. தங்கமணி படத்திறப்பு
தோழர். S. காசி விஸ்வநாதன் அவர்கள்,
(மாநிலத் தலைவர், AITUC தமிழ் மாநிலக்குழு)

வள்ளியம்மாள் படத்திறப்பு
தோழர். பெ. கணபதி சுப்பிரமணியன் அவர்கள்,
(மாநில துணைத் தலைவர், இந்திய வழக்கறிஞர்கள் சங்கம்)

வாழ்த்துரை
தோழர். P. கரும்பன் அவர்கள்,
(மாவட்ட செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி)
தோழர். P. லோகநாதன் அவர்கள்,
(மாவட்ட பொதுச் செயலாளர், AITUC தூத்துக்குடி மாவட்டக்குழு)
தோழர். E. கிருஷ்ணராஜ் அவர்கள்.
(மாவட்டத் தலைவர், AITUC தூத்துக்குடி மாவட்டக்குழு)
தோழர். G. தனலெட்சுமி அவர்கள்,
(மாநகரச் செயலாளர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தூத்துக்குடி மாமன்ற உறுப்பினர்)

நன்றியுரை
தோழர். A. பாலசிங்கம் அவர்கள்,
(மாவட்ட பொருளாளர், AITUC தூத்துக்குடி மாவட்டக்குழு)

தூத்துக்குடி மாவட்ட AITUC பஞ்சாலை தொழிலாளர் சங்கம்
இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தூத்துக்குடி மாநகரக்குழு
அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் (AITUC)
தூத்துக்குடி மாவட்டக்குழு

JANASAKTHI Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 02.12.2023 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

# போலி அறிவியலை புகுத்தி மருத்துவக் கட்டமைப்பை சிதைக்க முயற்சி

## ஒன்றிய பாஜக அரசு மீது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சாடல்

**போலி அறிவியலைப் புகுத்தி சிறந்த மருத்துவக் கட்டமைப்பை சிதைக்க முற்படும் ஒன்றிய பாஜக அரசிடம் இருந்து மருத்துவத்தையும் நாட்டையும் மீட்போம் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உறுதிபடத் தெரிவித்தார்.**









சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தின் நான்காவது மாநில மாநாடு மற்றும் சங்கத்தின் 20வது ஆண்டு தொடக்க விழா, 26.11.2023 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்றது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக மாநாட்டில் உரையாற்றினார். அவருடைய பேச்சு வருமாறு:

மனித உயிர்களைக் காக்கும் மகத்தான பணியைத்தான், சமூக சமத்துவத்திற்கான டாக்டர்கள் சங்கத்தைச் சேர்ந்த ஜி.ஆர்.ரவீந்திரநாத் உட்பட அனைத்து டாக்டர்களும் மேற்கொண்டிருக்கிறீர்கள். உயிர்களைக் காப்பாற்றுவது என்பது, உங்களின் தொழில் மட்டுமல்ல; சமுதாயத்திற்கு நீங்கள் செய்கிற சேவை! அப்படிப்பட்ட சமுதாயத்தில் சமத்துவம் நிலவ வேண்டும். சமத்துவம் இல்லை என்றால், அது ஆரோக்கியமான சமுதாயமாக இருக்க முடியாது. பிறப்பு மற்றும் சாதி அடிப்படையிலான ஏற்றத்தாழ்வுகளால் சமுதாயத்தின் சமத்துவம் சீர்குலைந்து நோய்வாய்ப்பட்டிருந்தால், அதற்குத் தேவையான சிகிச்சைதான், சமூகநீதி!

புரட்சியாளர் அம்பேத்கர் அவர்கள், அந்தச் சமூக சிகிச்சையை, அரசியல் சட்டத்தின் மூலமாகக் கொடுத்தார். நம்முடைய தமிழ்நாட்டில் அந்தச் சிகிச்சையை மேற்கொண்டவர்களில் முக்கியமானவர்கள் மருத்துவர்கள். முறையாக மருத்துவம் படித்து மக்களுக்குச் சிகிச்சை அளித்து வந்த டாக்டர் நடேசனாரும், டாக்டர் டி.எம்.நாயரும் பிட்டி.தியாகராயருடன் இணைந்து நீதிக்கட்சி என்ற தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை உருவாக்கி, சமூகநீதி என்ற சிறப்பான சிகிச்சையை சமுதாயத்திற்குத் தந்தார்கள். அந்த சிகிச்சையைப் பனகல் அரசர் சிறப்பாக நடைமுறைப்படுத்தினார்.

தந்தை பெரியார் அந்தச் சிகிச்சையை அறுவை சிகிச்சையாக மாற்றினார். நெடுங்காலமாகச் செல்லரித்துப் போயிருந்த பகுதிகளைப் பெரியார் அகற்றினார். புதிய ரத்த அணுக்கள் உருவாகிற வகையிலான சிகிச்சையைப் பேரறிஞர் அண்ணா வகுத்தளித்தார். அதை வெற்றிகரமாகச் செயல்படுத்தி, நோயற்ற நலமான சமூகத்தைப் படைத்தார் டாக்டர் கலைஞர்.

மருத்துவத் துறையில் கடந்த 10 ஆண்டுகளாக சமூகநீதிக்கு எதிரான சிந்தனைகளையும் செயல்பாடுகளையும் எதிர்கொள்கிறோம். இந்தச் சவால்கள் அனைத்தும், தமிழ்நாட்டில் சிறப்பாக இருக்கும் மருத்துவக் கட்டமைப்புகளை சிதைப்பதோடு, மருத்துவம் படித்து, டாக்டர்களாகி சமுதாயத்திற்குச் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று நினைக்கும் மாணவர்களின் உணர்வுகளையும், கனவுகளையும் பாழாக்குகிறது.





உலகளவில் அறிவியல் துறையில் நடக்கும் புதிய ஆராய்ச்சிகளையும் மருத்துவத்துறையில் ஏற்படுகிற வளர்ச்சிகளையும் உடனுக்குடன் கவனித்து, தமிழ்நாட்டில் செயல்படுத்துவதன் விளைவாகத்தான் பன்னோக்கு மருத்துவமனைகள், சிறப்பு நோக்கு மருத்துவமனைகள் தமிழ்நாட்டில் சிறப்பான சிகிச்சையை வழங்கி வருகிறது.

அறிவியலுக்குப் புறம்பான மருத்துவ முறைகள், பொதுமக்களைச் சோதனை எலிகளாக மாற்றிடும் அபாயம் கொண்டவை. இந்தியா சோதனை எலியாக மாறிடுமோ என்ற அச்சம் சமூக சமத்துவ மருத்துவர்கள் சங்கத்தைச் சார்ந்த உங்களிடம் இருப்பதை உணருகிறேன்.

ஏன் என்றால், மக்களின் உயிர் காத்து, அவர்களின் ஆயுளை நீட்டிக்கும் நவீன அறிவியல் மருத்துவத்தை நீர்த்துப் போகச் செய்கிற வகையில் Mix-opathy (மிக்ஸோபதி), ஒருங்கிணைந்த மருத்துவம், Common Foundation Course, வேதகால மருத்துவம், ஆன்மீக மருத்துவம், சோதிட மருத்துவம் என்று போலி அறிவியலைத் திணிக்கும் முயற்சிகள் நடந்துகொண்டு இருப்பதால் அதை எதிர்த்துப் போராட வேண்டிய கடமையுணர்வோடும் இந்த மாநாடு நடந்துகொண்டு இருக்கிறது. மருத்துவர்களான உங்களின் அறிவுப்பூர்வமான உணர்வுப்பூர்வமான போராட்டத்தில்

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்




வெளிவந்துவிட்டது!
டி.எம்.மூர்த்தி எழுதிய
இந்தியப் பொருளாதாரம்
ஒரு தற்கொலைப் பாதை
விலை: ரூ.25
NCBH அனைத்து விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்
NCBH
வாங்கிப் படியுங்கள்!

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliyer Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **T.M.Murthi,**
Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.